
www.tamilarangam.net

சுமைகள்

சுமைகள் 23 புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை 1997 Sumaihal Nr 23 Sept, Oktober, November 1997

# 1917 இல் உலகைக் குலுக்கிய புரட்சியின் 80 வது வருடத்தில் நாம் அதே புரட்சியைக் கோரி



உலகைக் குலுக்கிய அந்தப் புரட்சி நாளை இன்று 80 வருடங்களின் பின் நினைவு கூறும் போது, அதன் முக்கியத்துவம், இன்று ஒரு புரட்சிகர நிலையின் ஊடகமாக மட்டுமே நாம் அணுக வேண்டிய கடமைப்பாட்டை கொண்டுள்ளோம். உலகில் பல ஆயிரம் வருடங்களில் பல ஆயிரம் ஆயிரம் புரட்சிகளை மக்கள் முன்னெடுத்தனர். இப்புரட்சிகள் எல்லாம் சமுதாயத்தில் அடிப்படை இயக்கவிதி மாறாது, அதன் மேல் அடுக்குகளில் மட்டுமே புரட்சிகர மாற்றத்தை நடத்தின.

இந்த ஆயிரம் ஆயிரம் புரட்சிகளில் இருந்து முற்றிலும் தெளிவாக வேறுபட்ட புரட்சியாக 1917 இல் பாட்டாளி வர்க்கம் எழுந்து ஆட்சியைப் பிடித்த போது, உலகம் குலுங்கியது மட்டும் இன்றி, அது மீள மீள நடக்கும் ஒரு மக்கள் போராட்ட நிகழ்வாக, உயிர் வீறு கொண்ட எழுச்சியாக உள்ளது.

இந்தப் புரட்சிதான் சமுதாயத்தின் அடிப்படை இயங்கு விதியை கேள்விக்கு உள்ளாக்கி, அதை தலைகீழாக புரட்டிப் போட்டு நொருக்கியது. இதனால் தான் இந்தப் புரட்சி உலகில் நடந்த எல்லாப் புரட்சியையும் விட கடும் எதிர்ப்புக்குள்ளாகியது.

இந்தப் புரட்சியின் உயிர் மூச்சுக்கள் மீது இன்று கூட விடாப் பிடியான தாக்குதலை எதிரி மட்டும் இன்றி, நண்பர் போல் வேடமிட்டவர்களும் வி...ாப்பிடியாகத் தொடுக்கின்றனர். சமுதாயத்தில் அனைத்து இயங்கும் விதியும் சுரண்டல் மேல்தான் கட்டப்பட்டு இருந்தன. இந்தக் கட்டமைப்புச் சுரண்டலைத் தகர்க்காத பல புரட்சியில் இருந்து வேறுபட்ட புரட்சி சுரண்டலைத் தகர்த்து ஒடுக்கிய போது தான், இப்புரட்சியின் ஆயுள் கூட ஊசலாடத் தொடங்கியது.

1871 இல் பாரிசில் நடந்த புரட்சியினை முன் அனுபவமாகக் கொண்டு 1917 இல் நடந்த உலகைக் குலுக்கிய புரட்சி, லெனின் தலைமையில் சுரண்டும் வர்க்கம் மீது தனது வீரம் மிக்க தாக்குதலைத் தொடுத்தது.

இந்தப் புரட்சியின் எதிரிகள் அந்நிய நாட்டுப் படை எடுப்புகளை எல்லாம் உலகை குலுக்கிய புரட்சி துவசம் செய்து முன்னேறியது. இதன் ஊடாக சர்வதேசப் புரட்சிக்கும், உலகில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் எல்லை இல்லாத உதவிகளை உலகை குலுக்கிய புரட்சி வாரி வழங்கியது.

இந்நிலையில் சுரண்டல் வர்க்கம் வெளியிலும், கட்சிக்குள்ளும் தனது அணிகளைத் தேடியது மட்டும் இன்றி கட்சிக்குள் தனக்கான போராட்டத்தைத் தொடங்கியது. தனக்கான அணிகளை அணிதிரட்டி

www.tamilarangam.net



கட்சிக்குள்ளும் வெளியிலும் போராடத் தொடங்கியது.
புரட்சிக்கு முன், பின் ஒரு வர்க்க சமுதாயத்தின் பிரதான எதிரியான சுரண்டல் வர்க்கத்தை எதிர்த்து வர்க்கப் போராட்டத்தில் ஸ்ராலின் மிக நீண்ட போராட்டுத்தை கட்சிக்குள் நடத்த வேண்டி இருந்தது. இப் போராட்டுத் தான் தொடர்ச்சியில் ஸ்ராலினின் மறைவைத் தொடர்ந்து குருசேவ் ஆட்சி ஏறிய உடன், வர்க்க சமுதாயத்தில் வர்க்க முரண்பாடு முடிவுக்கு வந்து விட்டது என அறிவித்து, சுரண்டும் வர்க்கத்திடம் ஆட்சியைப் படிப்படியாகக் கையளித்தான். 1917ம் ஆண்டுப் புரட்சியை மட்டும் இன்றி, உலகப் புரட்சியை கூட காட்டிக் கொடுத்து சுரண்டும் வர்க்கத்துக்கு சேவை செய்தான்.
1917ம் ஆண்டு புரட்சி என்பது ஏகாதிபத்தியத்துக்கு குலை நடுக்கத்தை கொடுப்பவையாக இருந்தது. எல்லாக் காலனி ஆட்சிகளிலும் வீறுகொண்ட எழுச்சிகள், காலனியாதிக்கத்தை விட்டு ஓட வைத்தது. உலகப் பாட்டாளி வர்க்கம் தனது புரட்சிகர இரத்தும் சிந்திய வீரமிக்க நீண்ட போராட்டத்தை நடத்த, 1917 புரட்சி முன் கையெடுத்து கொடுத்தது.
ஆம் இன்று உலகைக் குலுக்கும் வர்க்கத்தின் போராட்ட வடிவம் பாட்டாளி வர்க்கப் புரட்சி மட்டுமே என்பது, எதிரியின் அணுகு முறைதான் நல்ல சான்றாக நடைமுறையில் விளக்கியது. அந்தளவுக்கு 1917 இல் ஏதிரி கிலிப் பிடிக்க பண்ணிய புரட்சி தான் இந்த உலகைக் குலுக்கிய புரட்சியாகும்.
இன்று நாம் முன்னெடுக்கும் ஒவ்வொரு அடியும் எதிரியின் பீடிக்கு உள்ளாகின்றது. மார்க்சிய விரோதிகளை, திரிபு வாதிகளை, பல வண்ணக் கோட்பாட்டுக் கனவான்களை கதிகலங்க வைக்கின்றது, ஒப்பாரி வைக்க வைக்கிறது. அவதூறு பொழிய வைக்கிறது.
எம் கையில் உள்ள ஆயுதம் 1917 இல் நடந்த உலகைக் குலுக்கிய புரட்சி தான். ஆம் எம்கையில் இப்புரட்சியின் எல்லா ஆழமான போராட்டத்தையும் எடுப்பதன் மூலம் எதிரியை வீழ்த்துவோம் என அறை கூவல் இட்டு, போராடுவோம் வாருங்கள் தோழர்களே.

# ஏகாதிபத்தியத்தின் ஜனநாயக கூக்குரல்.

ஏகாதிபத்தியத்தின் ஒடுக்கு முறை முன் எப்பொழுதும் இல்லாதவாறு எதேர்ச்சாதிகாரத்தைக் கொண்டதாகவுள்ளது. ஒவ்வொரு நாடுகளில் இருந்தும் ஆட்சித் தலைவர்கள் செல்கின்றபோது பெரும் குழுவொன்றும் ஆட்சித் தலைவகளைத் தொடர்கின்றனர். இவர்கள் முதலாளி வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். செல்கின்ற வேளையில் தமது வர்த்தக நலன்களை பாதுகாத்துக் கொண்டு வருக்கின்றனர். மேற்கு நாடுகள் தமது பயணத்தை மேற்கொள்கின்ற போது ஜனநாயக உரிமை பற்றிக் கதைப்பதாக பிதட்டிக் கொண்கின்றது எனினும் பொருளாதார நலனுக்கு பின்னால் தான் எதுவும் இந்நிலைதான் கிளின்டன் தென் அமெரிக்காவிற்கு விஜயம் செய்தால் என்ன, நோர்வே வெளிநாட்டமைச்சர் சீனாவிற்கு விஜயம் செய்தால் என்ன, சீனத் தலைவர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்தால் என்ன எல்லாம் ஒன்றுதான் ஆனால் ஜனநாயகம் பற்றிக் கதைக்கின்ற போது எல்லா நாடுகளும் உலகத்தின் இரட்சகர்கள் மாதிரித்தான் கதைக்கின்றன. அத்துடன் தனது நலனுக்கு முரணாக நடக்கின்ற நாடுகளை வர்த்தக தடைகளை எற்படுத்திக கொடுமைப் படுத்துகின்றன. தொடர்பு கொள்கின்ற நாடுகளையும் வெருட்டி தமது இஸ்டமான கொள்கைகளை செயற்படுத்த நிர்ப்பந்திக்கின்றன.
1988 இல் Pan Am விமானத்தை குண்டு வைத்து தகர்த்ததில் 270 பயணிகள் கொல்லப்பட்டனர். இதில் தேடப்படுகின்ற சந்தேக நபர்களை தம்மிடம் ஒப்படைக்கும் படி அமெரிக்காவும், பிரித்தானியாவும் கேட்கின்றன. அத்துடன் கடாபி குண்டு வெடிப்பிற்குப் பின்னால் இருப்பதாக குற்றம் சாட்டுகின்றனர். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அந்த நாடுகளில் நீதி கிடைக்காது என்றதினால் அவர்களை ஒப்படைக்க மறுக்கின்றதுடன் மூன்றாம் நாட்டில் வழக்கை நடத்தும் படி கோருகின்றது. இவ்வாறான பிரச்சினையில் ஐ.நாவின் உதவியுடன் லிபியா மீதான தடைகளை மேற்கொண்டுள்ளனர். இந்த ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள். தென் ஆபிரிக்க ஜனதிபதி நெல்சன் மண்டேலா பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கு செல்லும் வழியில் லிபியா நாட்டிற்குச் சென்று அந்நாட்டின் தலைவரான கேர்ணல் கடாபியைச் சந்தித்தார். இவரின் பயணத்தை அமெரிக்க ஏகாதிபத்தியம் கண்டித்துள்ளது. சர்வதேச பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்யும் நாடாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தாலும், ஏனைய மேற்கு ஏகாதிபத்தியத்தாலும் கனிக்கப்படும் நாடான லிபியா ஐக்கியநாடுகள் சபையில் தடைக்கு

www.tamilarangam.net



ஆளாகியுள்ளது. இந்த தடையை மதிக்கும் பொருட்டே தான் துனிசியா (Tunisia) வழியாக சென்று லிபியா சென்றடைந்தார்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு பதிலலித்த மண்டேலா தாம் தனியாக நின்று போராடிய போது தமது உற்ற நண்பனாக இருந்தது லிபியா என்றும் ஆனால் அமெரிக்காவோ எதிரிகளுக்கு உதவியாதாக கூறியதுடன், உலகப் பொலீசாக செயற்படுவதை விட்டு தமது வேலையை மாத்திரம் பார்க்கும் படி கூறியுள்ளார். அத்துடன் ஐ.நா சபையின் தடையை முடிவிற்கு கொண்டு வர தாம் முயற்சி எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

ஐ.நா வினால் அனுப்பப்பட்ட அமெரிக்காவைச் சேர்ந்த ஆயுத பரிசோதனையாளர்களை வெளியேற்றவும் ஈராக் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இரு பரிசோதகர்களை தரையில் இறங்கவும் அனுமதிக்க வில்லை. இந்த முடிவானது அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளை சினம் கொள்ள வைத்துள்ளது. இவர்கள் மீண்டும் ஈராக் மீதுதாக்குதல் நடத்தும் திட்டத்திலும் எண்ணம் கொண்டுள்ளனர். ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாகக் காட்டிக் கொள்ளும் ஏகாதிபத்தியம் உலக அரசியலில் சந்தர்ப்பவாத செயற்பாட்டையே கொண்டுள்ளது. கியூபா, வடகொரியா, ஈரான், ஈராக் மீதான தடைகளை மேற்கொள்ளும் ஏகாதிபத்தியம் பயங்கர வாதம் பற்றிய பிரச்சினை எடுத்துக் கொண்டால் இவர்களின் வளர்ப்பான இஸ்ரேலிய அரசு புரிகின்ற பயங்கரவாதத்தைப் பற்றிக் கதைப்பதை தவிர்த்து விடுகின்றன. பலஸ்தீனர்களின் பிரதேசங்களில் குடியிருப்புக்களை விஸ்தரிப்பதற்கு எதிராக எந்த ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் செய்யாது பாசாங்கிற்கு அறிக்கையை மாத்திரம் விட்டுக் கொண்டிருக்கின்றன. லெபனான், சிரியாவின் பிரதேசங்களை விட்டு வெளியேறும் படி எத்தனை முறை ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றினாலும் பிரயோசனம் இல்லாத நிலைதான். உலகம் இன்று ஏகாதிபத்தியத்தின் ஏதேர்ச்சாதிகாரத்தில் சிக்கித் தவிக்கின்றது. ஈராக்கானது தான் ஆக்கிரமித்த குவைத்தை சைதத்தைவிட ஏகாதிபத்தியங்கள் ஈராக்கை வெகு மோசமாக சிதைத்துள்ளனர். இந்தப் பரிசோதகர்கள் எந்த வகையிலும் பாட்டாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பாட்டாளி வர்க்கச் சர்வதேசிய வாதிகள் அல்ல. ஏகாதிபத்தியங்களுக்கு சேவகம் செய்கின்ற கூலிப் பட்டாளமே. இவர்களை எந்த நாட்டு எல்லைக்குள்ளும் அனுமதிக்கப்பட முடியாதவர்கள். இவர்களின் வெளியேற்றத்திற்காக குரல் கொடுக்கின்ற இந்தச் சக்திகள் ஏகாதிபத்தியங்களின் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றி கதைக்கின்ற போது அம்மக்களின் துன்பத்தைச் செவிமடுக்க இவர்களால் முடிவதில்லை.

இவைகள் எல்லாம் ஜனநாயத்தின் பெயரால் இவைகளை பிரச்சார சாதனங்கள் பரப்புகின்றன. மேற்கு மக்களும் ஏமாளிகளாக பிரச்சாரத்திற்கு அடிமையாகியுள்ளனர்.

உலகப் பொலீசாக செயற்படும் அமெரிக்கா தனது உளவுப் படைக்கு 186 மில்லியன் டொலர்களை இந்த வருடத்திற்கான செலவுக்கென ஒதுக்கியுள்ளனர். இந்த உளவுப் படையின் மூலமே ஆட்சியாளர்களை உருவாக்குவதும், ஆட்சியில் இருந்து அகற்றுவதும் சதி செய்வதும் இவர்களே தென் ஆபிரிக்காவின் கம்யூனிஸ்ட் கட்சி தலைவராக இருந்த கிறிஸ் கனியை (Chris Hanni) நாசிச சக்திகளைக் கொண்டு கொலை செய்தனர். இப்போ தீவிரவாத தன்மை கொண்ட வின்னி மணண்டேலாவை (Winnie mandela) அரசியல் அரங்கில் இருந்து வெளியேற்ற உக்கிரமான பிரச்சாரத்தைத் தொடுக்கின்றன. இந்தப் பணத்தின் மூலம் ஒரு நாட்டில் உள்ள திரிபுவாதிகளையும், பிற்போக்கு வாதிகளையும் வைத்து ஒரு கம்யூனிஸ்ட் கட்சியையும் அமைந்துக் கொள்ள முடிகின்றது. இவ்மாதிரியான செயற்பாடுகள் வரலாற்றில் நடை பெற்றுத் தான் இருக்கின்றது. இந்த மாதிரியான சக்திகளை வைத்து புரட்சியைத் திசை திருப்புவதுடன் சிதைக்கின்றன.

அமெரிக்கா அத்திலாந்திக் சமுத்திர நாடுகளின் பாதுகாப்புக் கூட்டணியிக்கு அப்பால் தனது பாதுகாப்புக் கூட்டாளியாக ஆயென்தீனாவை அறிவித்துள்ளது. கிளின்டனின் தென் அமெரிக்க பயணத்தின் போது அவர் சென்று வந்த நாடுகள் அனைத்திலும் அங்குள்ள தேசபக்தர், இடது சாரிகளாலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயென்தீனாவில் அந்நிய வங்கிகள் நிறுவனங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியது. பீரேசில் உலக வங்கியின் கடன் சுமைகள் தாளாது தள்ளாடுகின்றது. அமெரிக்காவின் எதேர்ச் சாதிகாரத்திற்கு எதிர்ப்புக்கள் இருக்கின்றது எனினும் அது பரந்து பட்ட மக்கள் போராட்டமான வடிவம் எடுக்கவில்லை. பீரேசிலில் எதிர்ப்புச் சின்னமாக இடது சாரிகளால் வாழைப் பழம் கொடுக்கப்பட்டது.

லத்தீன் அமெரிக்க நாடுகள் பல புவியலில் அண்டையில் இருப்பதனால் மற்றைய நாடுகளை விட கூடிய கண்காணிப்பிற்கும் நேரடி நெருக்குதல், சதிகளுக்கும் பலியாகின்றன. சேகுவராவைக் கொன்றது போலலே ருபாக்கமாறு போராளிகளை யப்பானிய தூதரகத்தில் பயணக் கைதிகள் சம்பவத்தின் போது

www.tamilarangam.net



கொன்று ஒழித்தனர். தொடர்ந்தும் மத்திய அமெரிக்க நாடுகளில் புரட்சியின் வாடை வீசாதவாறு போதைமருந்துகளைக் தேசங்கள் முழுவதும் பரப்புகின்றது. பனாமாவில் ஆட்சித் தலைவராக இருந்த மனுவல் நொரேகாவை போதை மருந்து வர்த்தகத்தில் பயன்படுத்தியது. முரண்பாடு ஏற்படவே அவனைக் கைது செய்யும் பொருட்டு நாட்டை ஆக்கிரமித்து பல ஆயிரக் கணக்கான மக்களை கொண்று குவித்து இறுதியில் அவனை வத்திக்கான் தூதரகத்தில் இருந்து கைது செய்தனர். இவைகள் ஆட்சியாளர்களை உருவாக்குவதும், கவிழ்பதன் நடவடிக்கையின் ஒரு பகுதியே.

சீனாவில் மனித உரிமை மீறப்படுவதாக, எதிர்ணித் தலைவர்களை சிறையில் அடைத்து வைத்துள்ளதாகவும் குறைப்படுகின்றன. அமெரிக்காவில் எத்தனையே ஜனநாயகத்திற்காக போராடுகின்ற போராளிகள் பொய் வழக்குச் சோடிக்கப்பட்டு சிறைத்துன்பம் அனுபவிக்கின்றனர், தூக்கில் ஏற்றப்பட்டுள்ளன. ஏத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் இருக்க இருப்பிடம், வேலை, கல்வி கற்க வசதியில்லாமல் இருக்கின்றன. இவைகள் எல்லாம் ஜனநாயகத்தை பாதுகாப்பதாக கூறுகின்ற நாட்டில் இருக்கின்ற கேவலங்கள். மனிதன் உடுக்க, வசிக்க, உண்ண இவைகயே முதலில் முக்கியமான அடிப்படைத் தேவையாகும். இவற்றை உலகின் பணக்கார, பொலீசாக செயற்படும் அமெரிக்காவால் தன்னுடைய நாட்டு மக்களுக்கு வசதி செய்ய வக்கில்லாத நிலையில் மற்றைய நாடுகளை பற்றி அதிகம் அக்கறை கொள்கின்றது.


மனித உரிமையைப் பற்றிப் பேசுகின்ற அமெரிக்காவால் தனது நாட்டுப் பிரஜைகளுக்கே தகுந்த சமூகப் பாதுகாப்புக் கொடுக்க வழியில்லாமல் இருக்கின்றது. ஆனால் உலகிலேயே சிறந்த மருந்துவ திட்டத்தைக் கொணடுள்ள கியூபா தனது தேவைக்கு அதிகமாகவுள்ள வைத்தியர்களை வறியநாடுகளுக்குச் அனுப்பி வைத்து உதவுகின்றது. ஜனநாயகம் என்பதன் மறுபெயர் சுரண்டல், சந்தைப் பொருளாதாரம், சதி, ஆயுத விற்பனை நிரந்தரமான சமாதானத்திற்கு எப்பொழுதும் பகைமையாக இருப்பதே. இவர்களின் மனித உரிமைக் குரல்என்பது ஏகாதிபத்திய பொருளாதாரத்தைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளுக்கு மேல் இவர்களின் குரல் தொழிற்படாது.

ஏகாதிபத்தியங்களின் சுரண்டலால் சுற்றாடல் மாறுபடுதலும் ஏற்படுகின்றன. இதனால் பழங்குடி மக்கள் தென் அமெரிக்காவிலும், தற்போதைய காடு தீப்பற்றி எரிந்ததினால் இந்தோனேசியாவில் பழங்குடிகளும் பாதிக்கப் படுகின்றனர். தாம் வாழவே முடியாத நிலையில் இருக்கின்ற நாடுகள் பழங்குடிகளையும் தமது இஸ்டத்திற்கு சுதந்திரமாக வாழவிடாமல் தடுக்கின்றனர். இவ்வாறான நெருக்கடிகளே இலங்கையிலும் வேடர்களுக்கு தமிழர்களாலும், சிங்களவர்களாலும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் நிறுவனங்களே பழங்குடிகளின் வாழ்க்கையையும், கனிவளங்களையும் திருடுகின்றனர். இவர்கள் தமது இயலாமையை மறைக்க, உண்மையை திசை திருப்ப அரும்பாடுபடுகின்றன.

நோர்வே நாட்டு நிறுவனம் இந்தோனேசியாவில் கனிவளத்தை தேடுவதிலும் பெரும் மின்ஆலை அமைப்பதிலும், அந்த பிரதேசத்தில் தமது ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுக்கவும் நிலங்களை ஆக்கிரமிக்கின்றன.

அமெரூனா[redacted]யில் வசிக்கின்ற மக்கள் தமது வாழ்க்கையை சுரங்கத் தொழில் நடவடிக்கைக்கு ஆக்கிரமிப்பாளர்களுக்கு தாரவார்த்துக் கொடுத்து விட்டதினால் அவர்கள் வாழ்க்கை சூனியமானதாக ஆகியிருக்கின்றது. இவர்களை தடுத்து நிறுத்துவதற்கு எந்த ஏகாதிபத்தியங்களுக்கும் துணிவில்லை. அப்படிச் செய்வார்களாயின் ஆட்சியில் இருந்து அகற்றப்படுவார்கள். அரசு என ஒன்று இருக்கின்றபோதே இதுபோன்ற நடவடிக்கைகளை பணக்கார வர்க்கத்திற்கு செய்து கொடுப்பதே கடமையாகக் கொண்டுள்ளது. எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற அமெரிக்காவிற் எமது தேசங்களில் நடக்கும் நிகழ்வுகளில் தலையீட வேண்டிய அவசியம் என்ன? இதற்கு விடைகளை கண்டுபிடிக்கும் பட்சத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளாக எல்லோரும் மாறலாம்.

(இங்கு ஏகாதிபத்தியத்துக்கு எதிராக எதிர்த்து நிற்கும் இவர்கள் எல்லோரும் பாட்டாளி வர்க்கத்தின் நண்பர்கள் அல்ல. மாறாக இவர்களும் வீமர்சனத்துக் குரியவர்களே)



www.tamilarangam.net



# சர்தேசப் போராளியின் 30 ஆண்டு நினைவும் இறுதிச் யாத்திரையும்

உலகில் பல போராளிகள் மனித குல விடிவுக்காக போராடிக் கொண்டு இருக்கின்றார்கள். இந்த வேளையில் அவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கிய பல வரலாற்றுப் தலைவர்களும், நடைபெற்ற புரட்சிகளும் சரித்திர ஆசிரியர்களால் மறைக்கப் படுகின்ற வேளையில் இவற்றை நினைவு கூர்வது வரலாற்றுக் கடமையாகும். 1997 ஆனது இரண்டு முக்கிய சம்பவங்களை நினைவு கொள்வ வைக்கின்றது. அதாவது சர்வதேச புரட்சிக்கு உந்துதலாக இருந்த சோவியத் பிறப்பின் 80 ஆண்டு நிறைவும், சர்வதேசிய புரட்சியாளராகவும், விஞ்ஞானியாகவும் கனிக்கப்படும் சேகுவரா வின் 30 வருட நினைவுமாகும்.

சேகுவரா (Ernesto Guevara de la Serna) 14.5.1928 இல் வட ஆர்யென்தீனாவில் றொசாறி யோவில் என்ற இடத்தில் பிறந்தார். வர்த்தகருக்கு மகனாகப் பிறந்தவருக்கு சிறு பிராயத்திலேயே தொய் நோயானது எதிரியாகியது. எனினும் அந்த வியாதியையும் பொருட்படுத்தாமல் தனது வரலாற்றுக் கடமையில் ஈடுபட்டார். தனது மருத்துவக் கல்வியை முடித்துக் கொண்டு நாடுசுற்றும் பயணத்தில் ஈடுபட்டார் இவருடைய பயணச் செலவினை தங்கும் இடங்களில் வேலை செய்து அடைத்துக் கொண்டார். இவர் பயணம் சென்ற போது பல நோயாளிகளைச் சந்திக்க வேண்டியும் இருந்தது. இதன் விழைவாகமருந்து ஒன்றையும் இக்காலத்தில் கண்டுபிடித்தார். கவுத்தமாலாவில் புரட்சி



நடைபெற்ற போது அங்கிருந்தார். அந்த நாட்டில் இருந்த போது கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்தால் தான் வேளை கிடைக்கும் என்ற நிபந்தனையை ஏற்றுக் கொள்ளாமல் நாட்டை விட்டு வெளியேறினார். பின்னர் சிறிது காலத்தின் பின்னர் மெக்சிக் கோவில் காஸ்ரோவை சந்திக்க நேர்ந்தது. இந்தச் சந்திப்பின் பின்னர் கியூபா புரட்சிப் படையில் இணைந்து கொண்டார். 1959 இல் வெற்றியடைந்த புரட்சியைத் தொடர்ந்த அமைக்கப்பட்ட அரசில் பாதுகாப்பு அமைச்சர், மத்திய வங்கித் தலைவர், தொழில் அமைச்சர் போன்ற பல பதவிகளை வகித்தார். இவற்றை உதறி எறிந்து விட்டு தனது படையை அமைத்துக் கொண்டு பொலிவியாவிற்கு பயணமானார். அங்கு அவர் சென்ற போது அங்கிருந்த பொதுவு டமைக்கட்சியின் ஆதரவு இவருக்கு கிடைக்கவில்லை. எனினும் தனது படைகளுடன் கெரில்லா யுத்தத்தில் 9.10.67 இல் அவர் இறக்கும் வரை ஈடுபட்டார். இவர் இவர் அமெரிக்க (CIA) உளவுத் துறையாலும் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட சர்வாதிகாரி றேனாவின்( Rene Barrientos) படையால் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பின்னர் CIA இன் உத்தரவின் பேரில் சுட்டுக் கொல்லப்பட்டார். சுட்டுக் கொண்ற பின்னர் இவருடைய கைகள் இரண்டையும் துண்டித்து அடையாளம் காட்டும் பொருட்டு உள்துறை அமைச்சராக இருந்த அந்தோனியோ (விசர் Alguedas Antonio என்று அழைக்கப்படும்) வினால் பாவிக்கப்பட்டது.

இந்த கைகள் இரண்டும் இனம் தெரியாதவர்களால் கொரோ நேல; (Juan Coronel) என்பரிடம் ஒப்படைக்கப்பட்டு 10 வருடங் களின் (பத்திரிகைச் செய்திக ளின்படி) பின்னர் 1979 இல் மொஸ்கோவில் கியூபா தூதரக அதிகாரியிடம் ஒப்படைக் கப்பட்டது. இவருடையதும் மற்றைய போராளிகளினதும் உடல்களை வல்லகிரண்டா (Vallegrende) என்ற இடத்தில் அமைந்துள்ள மருத்துவமனைக்கு சேர்மதியான துப்பரவு செய்யும் அறைக்குப் பக்கத்தில் குழி கிண்டப்பட்டு அதனுள் உடல்களை போட்ட பின்னர் அதற்கு மேல் சீமெந்தினால் நிரப்பப்பட்டது. இவர்களின் எழும்புக் கூடுகளை அண்மையில் 30 வருட அஞ்ஞாதவாசத்தின் பின்னர் நாடு திருப்பிய பாகோ (Paco) என்ற சேகுவராவின் படையில் செயற்பட்ட தோழரின் தலைமையில் ஆயெர்ந்தீன,கியூபா நாட்டு ஆய்வாளர்களினால் 30 வருட ரகசியமாக வைக்கப்ப ட்டிருந்த இடத்தையும், இரகசியத்தையும் வெளிப்படுத்த

www.tamilarangam.net



முடிந்தது. தோழர் சேகுவராவினதும், மற்றறைய தோழர்களினதும் இறந்த உடலின் மிகுதிகள் கியூபாவிற்கு கொண்டு வரப்பட்டது. இறந்த தமது தலைவருக்கும், சக போராளிக ளுக்கும் இறுதியஞ்சலியை மக்கள் செலுத்தினர். சகல மரியாதை களுடன் இத்தியாகிகளின் இறுதியடக்கம் பல ஆயிரக்கண க்கான மக்கள் முன்நிலையில் நடை பெற்றது.

இறந்த இப்போராளியின் சமாதிகளின் மேல் மேற்கு நிறுவனங்கள் தமதுவியாபார யுக்திகளை நடத்தாமல் விட்டதுமில்லை. 1960களில் இருந்த சேகுவரா அலையைப் பயன்படுத்தி அவர் பற்றிய இசைத்தட்டுக்களை வெளியிட்டு சம்பாதித்தனர், திரைப்படம் எடுத்தனர். இப்போ அவரின் படத்தை பொறித்து பெனியன்கள், மணிக்கூடு என விற்பனைக்கு விடுகின்றனர்.

சேகுவரா எடுத்துக் கொண்ட பொலிவியாவின் புரட்சிக் கடமை இன்னும் முடியவில்லையாயினும், அவருடைய தியாகமானது உலகில் ஒடுக்கப்படும் மக்களால் நினைவில் கொள்ளப்பட்டுத்தான் வருகின்றது. அவருடைய போர்த்தந்திர முறை விமர்சனத்திற்கும், ஆய்விற்கும் உள்ளாக்க வேண்டிவேளை கடந்த காலம் பற்றிய ஆய்வைப் பற்றிய ஒரு பகுதியாகின்றது. அவருடைய கருத்துக்களில் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் நேச முரண்பாடுகளாகவே தான் இருக்கும் பகை முரண்பாடுகளாக இருக்க முடியாது.

உலகின் பலபாகங்களிலும் இவரின் கருத்தில் ஈடுபாடு கொண்ட குழுக்கள் தொன்றின, அவைகள் இவரின் யுத்த தந்திரத்தைக் கைக்கொண்டனர். இலங்கையில் ரோகண விஜேவீராவின் தலைமையிலான இளைஞர்கள் புரட்சியை நடத்த முனைந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளும் இவரின்யுத்த தந்திரோபாயத்தைத் தான் கைக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்..

போராட்டத்தில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு போராளிகளுக்கும் சேகுவரா ஒரு உந்து சக்தியாக இருக்கின்றார். பதவிகள் எவ்வளவு உயர்ந்தாக இருந்தாலும் அவற்றை உதறித் தள்ளிவிட்டு தான் கொண்ட கருத்துக்காக இறுதிவரை போராடினார். இந்த விதமான உதாரணம் சேகுவராவிடம் இருந்து பெறவேண்டிய நல்ல உதாரணமாகும்.

# ஈழப் போராளிகளின் சிந்தனைக்கு..

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### 3 குறைகளைக் களைந்து

### தேக்கத்தை உடைத்தல்

தேக்கத்திற்கான பல்வேறு காரணம் ஒன்றோடுடொன்று தொடர்புடையனவாய் அமைந்தி ருப்பது கண்கூடு. எடுத்துக் காட்டாக பல அடிப்படையான கோட்பாட்டுப் பிரச்சினைகளைக் கோட்பாடளவிலே தீர்க்காமை. தேக்கத்திற்கான முதற் காரணமாக குறிப்பிட்டோம். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் எத்தகைய கருவியை ( உலகப் பார்வையை – தத்துவத்தை)க் கைக் கொள்ளப் போகின்றோம் என்பது பிரச்சினையாகின்றது. இலங்கை, இந்திய அரசுகளின் வர்க்கச் சார்பையோ, விடுதலைப் போரின் தன்மையோ, விடுதலைக்குப் பின் அமைக்கப்போகும் அரசின் தன்மையோ விளக்குவதற்கு நாம் மார்க்சிய – லெனினிய அணுகு முறையைக் கைக் கொள்ளப் போகின்றோமா இல்லை முதலாளிய பார்வைகளைக் கைக்கொள்ளப்போகின்றோமா என்ற கேள்வி எழுகின்றது. இந்தக் கேள்விக்கான பதில் அமைப்பின் வர்க்க கூட்டைப் பொறுத்தமை கின்றது. அமைப்பில் ஆதிக்கம் செலுத்தும் வலதுசாரிகள் மார்க்சிய – லெனியப் பார்வையை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் இதனை அவர்கள் வெளிப்ப டையாக அறிவிக்கப் போவ தில்லையாயினும் அதுவே உண்மை. இவர்கள் குறிக்கோள் வெற்றியடைந்தால் அமைப்பில் வலதுசாரிகள் கை மேலும் ஓங்கும். மேலும் மேலும் முதலாளியத் தன்மையில் ராணுவமும், அமைப்பும் புனருத்தாரனம் செய்யப்படும். மேலும் மேலும் இந்திய அரசைச் சார்ந்து நிற்கும் தன்மையும், இந்திய – இலங்கை ஆளும் வர்க்கம் திணிக்கும் 'தீர்வைச்' சுமக்கும் நிர்ப்பந்தமும் ஏற்படும்.

தங்களது அற்புதமான இளமையைத் தத்தம் செய்துவிட்டு விடுதலைப் போரில் குதித்த போராளிகளின் கனவு அதுவல்ல என்பது வெளிப்படை, முழுமையான சுயநிர்ணய ஊமை பெற்ற விடுதலையாகவோ, பரந்துபட்ட மக்களுக்கான விடுதலையாகவோ அது அமையாது என்பதும் தெளிவு. ஏனவே அமைப்புக்குள் உள்ள இடதுசாரிகள் அமைப்புக்குள் உள்ள தங்கள் சக்திகளை ஆதிக்க சக்திகட்கும் எதிரான போராட்டத்தில் குவிப்பதும் இப்போதுள்ள நிலையில் அவசரமானதாகவும் அவசியமா னதாகவும் ஆகின்றன.

இந்தப் பணி இடையூறுகள் மிகுந்ததெனினும், எளிதான தில்லை எனினும் நம்பிக்கை தளரக் கூடியதல்ல உணர்வு பெற்ற

www.tamilarangam.net



பாட்டாளிகளைத் தங்கள் அணியில் இணைத்து, உணர்வு பெறாத பாட்டாளிகள் மத்தியில் தொடர்ச்சியான பிரச்சாரங்கள் செய்வதன் மூலம், தேக்கங்களையும் காரணங்களையும் சுட்டிக் காட்டுவதன் மூலமும் அவர்களையும் இடதுசாரிகள் அணைத்தாக வேண்டும். வலது அணியில் நேர்மையான விசுவாசத்துடனும் விளங்குகிற லும்பன்களையும், குட்டி பூர்சுவா வர்க்கத்தினரையும் பிரச்சாரத்தின் மூலம் இடது அணிக்குக் கீழ் கொண்டு வருவது அவ்வளவு எளிதல்ல என்றாலும் சாதிக்க முடியாதது அல்ல. அமைப்புக்குள் உள்ள தேக்கங்கள், சீரழிவுகள் பற்றிச் சிந்திக்கத் துவங்கியுள்ள சூழலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சரியான கோணத்தில் விளக்குவதன் மூலம் இவர்களைச் சிந்திக்க வைக்க முடியும். அனைத்தையும் தியாகம் செய்து விட்டு போர்க்குணத்துடன் வந்துள்ள இவர்களைச் சரியான திசைக்குத் திருப்புவது அவ்வளவு கடினமானதல்ல.

எனவே மிகுந்திருப்பது ஆதிக்க சக்திகளும், சந்தர்ப்பவாதிகளுமேயோவர். இவர்களைத் திருத்துவது என்பதைக் காட்டிலும் இவர்களிடமிருந்து இயக்கங்களை விடுவிப்பதே தலையாய பணியாகும். இந்த முயற்சிக்கெதிராக இவர்கள் சகல தந்திரோபாயங்களையும் பயன்படுத்துவர் என்பதில் ஐயமில்லை. ஏற்கனவே ஆதிக்க நிலையிலுள்ள இவர்கள் தங்களின் முயற்சியில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அதிகம் என்பதிலும் ஐயமில்லை. எனினும் இடதுசாரிகள் மனந்தளராது இருப்பதற்கான சூழல்களும் இன்று நிலவுகின்றன என்பதையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

விடுதலைப் போரில் ஏற்பட்டுள்ள தேக்கமும், மக்களிடமிருந்து அமைப்புக்கள் அன்னியப்பட்டு அராஜகங்களும் பழிவாங்கும் நடவடிக்கைகளும் அணிகள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் வெளிப்பட்டு நிற்கும் தன்மையும் இன்று அணிகள் தம் புருவத்தை உயர்த்துவதற்குக் காரணமாகி உள்ளன. இதன் இதன் விளைவாக பெரும்பான்மையான நேர்மையான சக்திகள் விடுதலைப் போர் பற்றியும் அதன் குறைநிலைகள் பற்றியும் அதிகம் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். இந்தச் சூழலில் ஆதிக்க சக்திகள் இதற்கு முன் செய்தது போல பழைய நடைமுறைகளின் அடிப்படையில் அதிருப்தியாளர்களை நீக்க முடியாது. அப்படி முயன்றால் அவர்கள் அம்பலப்பட்டுப் போகும் வாய்ப்பு உண்டு.

இந்தச் சூழலில் ஆதிக்க சக்திகள் அதிருப்தியைச் சமாளித்து அதே சமயத்தில் தங்கள் ஆதிக்கத்தையும் தக்க வைக்க வேறு வகையான நடைமுறைகளையே கையாள்வர். அமைப்பில் ஜனநாயக பூர்வமான உள்கட்சி விவாதங்களுக்கு வாய்ப்பளிப்பது போலவும், சனநாயப் பூர்வமான வாக்கெடுப்புக்கள் மூலம் தலைமையிலும், இதர அதிகாரப் பதவிகளிலும் பல்வேறு விதமான மாற்றங்களுக்கு வாய்ப்பளிப்பது போலவும் நடந்து கொள்வர்.

எனினும் இந்த விவாதங்களையும், நடைமுறைகளையும் தங்கள் மேற்பார்வையில் நடத்துவதன் மூலமும், இடதுசாரி சக்திகளை அவர்களது முழுமையான வீச்சுடன் செயல்பாட்டிற்கு அனுமதிக்காததன் மூலமும், ஏற்கனவே தங்களுக்குள்ள சுய செல்வாக்குகளைப் பயன்படுத்துவதன் மூலமும், நிலவும் ராணுவ, மற்றும் அமைப்புக்களிலுள்ள முதலாளியத் தன்மையின் மூலமும்

அ. ஆதிக்க சக்திகள் சிற்சில மாற்றங்களுடன் தங்களின் நிலையை மேலும் உறுதியுடன் மறுநிர்மாணம் செய்து கொள்வர்.

ஆ. முரண்படுகின்ற சக்திகளை அடையாளம் கண்டு கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்துவர்.

ஆனாலும் உட்கட்சிப் போராளிகள் இதனால் சோர்ந்துவிடத் தேவையில்லை. இந்த விவாதங்களையும் நடைமுறைகளையும் ஒரு வாய்ப்பாகக் கொண்டு சந்தர்ப்பவாதத்தையும் பிற்போக்குத் தன்மைகளையும் அணிகளுக்கு அடையாளம் காட்டவும், அவர்களைச் சரியான அரசியல் பார்வையை நோக்கித் திருப்புவதற்கும் பயன்படுத்தலாம். இதிலும் உட்கட்சிப் போராளிகள் இருவழிகளைப் பின்பற்றலாம்.

அ. ஏற்கனவே ஆதிக்க சக்திகளிடம் முழுமையாக வெளிப்பட்டுப் போனவர்கள் மேலும் மேலும் அணிகள் மத்தியில் பரவலாக நேர்மையான அதிருப்தியாளராக அறியப்படுவதே பாதுகாப்பு என்கிற வகையில் வெளிப்படையான தாக்குதல்களைத் தொடுக்கலாம். சரியான கோட்பாடுகளுக்காக வெளிப்படையாக நின்று போராடலாம்.

ஆ. முழுமையாக வெளிப்பட்டுப் போகாத சக்திகள் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு அவற்றின் குறைநிறைகளைப் பாரதூரமாக விமர்சிப்பதன் மூலமாக சரியான பார்வையை நோக்கி அணிகளைத் திருப்பவும் நேர்மையான போராளியாக அணிகள் மத்தியில் தம்மை இனங்காட்டிக் கொள்ளவும் செய்யலாம். வெளிப்படையான முழக்கங்களை இவர்கள் முன் வைக்க வேண்டியதில்லை. நபர்களின் மீது நேரடியாகத் தாக்குதல் மூலமாக சந்தர்ப்பவாத்தை அடையாளங்காட்டுவதே முக்கியம்.

இருசாராரின் நடவடிக்கைகளுமே அமைப்பின் மீது நம்பிக்கையை ஏற்படத்தக்கனவாகவே இருப்பது நல்லது.

இந்தப் பொதுவான முன்னுரையின் பின்னணியில் தவறுகளைக் களைவதற்கான நடவடிக்கைளாக கீழ்க்கண்டவற்றை முன்

www.tamilarangam.net



வைக்கலாம்.

1.அமைப்பு, ராணுவம் ஆகியவற்றை நிர்மாணிப்பதிலான முதலாளியக் கண்ணோட்டங்கள் நீக்கப்பட வேண்டும். ராணுவ, அமைப்பு ஆகியவற்றுள் மேல் மட்டத் தினருக்கும், அடி மட்டத்தி னருக்குமான உறவுகளும், ராணுவத்திற்கும், மக்களுக்குமான உறவுகளும் சோசலிச மயமாக்கப்பட வேண்டும். இது எல்லா மட்டங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டும். எடுத்துக் காட்டாகப் பதவி உயர்வை எடுத்துக் கொள்வோம். ஒரு முதலாளிய நிறுவனத்தில் அனைத்தும் நிறுவத்தின் லாபத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும்.கொள்கைகளும் நோக்கங்களும் அங்கு முதன்மைப் படுத்தப்படுவதில்லை. லாபமே அங்கு கொள்கையாகவும், நோக்கமாகவும் அமைகின்றது. எனவே திறமை ஒன்றே அங்கு பதவி உயர்வுக்கு அடிப்படை யாகின்றது. இந்தத் திறமையும் மேலிருந்தே அளக்கப்படுகின்றது. ஆனால் ஒரு மக்கள் ராணுவத்தில் ஒருவனின் செயல் திறமைக்கு முக்கியத்துவம் அளிக்கிற அதேநேரத்தில் அவன் எந்த அளவுக்கு அரசியல் புரிதல் கொண்டிருக்கிறான் என்பதும், மக்களைச் சார்ந்திருக்கின்றான் என்பதும் முக்கியமாகின்றன. பதவி உயர்வு என்பது மேலிருந்து தீர்மானிக்கப்படுவதாக இல்லா மல் கீழிருந்து (அதாவது தேர்வு அடிப்படையில்) தீர்மானிக்க படுவதாக இருப்பது நல்லது. இதன் பொருள் அதீத ஜனநாயகமல்ல, கட்டுப்பாடுகளை மறுதலிப்பதல்ல, மாறாக இத்தகைய சூழலிலேயே உண்மையான கட்டுப்பாடுகள் விளங்கும். இதுபோன்ற இதர வடிவங்களை இதர மக்கள் யுத்த அனுவங்களிலிருந்து பெறலாம்.

2. ராணுவத் தலைமைக்கு அரசியல், ஸ்தாபனத் தலைமைகள் கட்டுப்பட்டதாக இருக்கும் நிலைமை நீக்கப்பட வேண்டும். ராணுவம் அரசியற்கடமைகளை நிறைவேற்றும் சாதனம் மட்டுமே. போரிடுவது மட்டுமே ராணுவத்தின் குறிக்கோளல்ல. மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதும், மக்களின் நம்பிக்கையைப் பெறுவதும், மக்களை ஆயுத பாணியாக்குவதும் ராணுவத்தின் பணியே. சுத்த ராணுவக் கண்ணோட்டம் நீக்கப்படவேண்டும்.

3. சுத்த ராணுவக் கண்ணோட்டம் ஊற்று மூலமான அணிகள் மத்தியிலான தாழ்ந்த அரசியற் தரத்தையும் கூலிப்படை மனப்பான்மையையும் போக்க வேண்டும். இதனை இரண்டு வழிகளில் நிறைவேற்றலாம்.

அ.அணிகளுக்குத் தொடர்ச் சியான அரசியற் கல்வியை அளிப்பதன் மூலம் அவர்களின் அரசியற் தரத்தை உயர்த்துவது.

ஆ.கூலிப்படை மனப்பான்மையைப் போக்குவதற்கு அதிக அளவில் அடித்தட்டு வர்க்கத்தினரையும், பாட்டாளி வர்க்த்தினரையும் அமைப்புக்குள் கொண்டு வருவதும் அவர்களை முக்கிய நிலைக்கு உயர்த்தும் வாய்ப்பை அதிபடுத்துவதும் முக்கியம்.

4. கீழ்மட்ட ஸ்தாபனங்கள் மேல்மட்ட ஸ்தாபனங்களைத் தொடர்ந்து விமர்சனம் செய்யும் வாய்ப்பை வழங்கி அதனை ஊக்குவிக்க வேண்டும். மக்களிடம் நம்பிக்கையைக் குறைக்கும் எந்த வழிகளிலும் அமைப்புக்குப் பொருள் சேர்க்க முயலக் கூடாது.

5. கடமை உணர்வு நேர்மை, உண்மை, ஒழுக்கம், தூய்மை போன்ற பண்புகள் மக்கள் மத்தியில் கடைப்பிடிக்காதவர்கள் எத்தகைய தியாகம் செய்தவர்க ளாயினும் பொறுப்புக்களில் இருந்து நீக்கப்பட வேண்டும். மக்களிடம் நம்பிக்கையைக் குறைக்கும் எந்த வழிகளிலும் அமைப்புக்குப் பொருள் சேர்க்க முயலக் கூடாது.

6 கூலி மனப்பான்மை, இன்பநாட்டம், ஊக்கமின்மை, ராணுவத்திலிருந்து விலகும் ஆசை ஆகிய பண்புடையோர் முக்கிய பொறுப்புக்களிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

7. எடுக்கப்பட்ட முடிவுகளை நிறைவேற்றுவது என்பதில் மேற்பார்வை இடுவது என்பது குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் (Checking inspector) மனப்பான்மை யோடல்லாமல் தொடர்புடைய களத்திற்குச் சென்று அங்குள்ள மக்களின் கருத்துக்களை அறிந்து தீர்மானிக்கப்பட வேண்டும்.

8. முடிவுகள் எடுப்பது மேலிருப்பவர்களின் உரிமை என்றில்லாமல் ஒவ்வொரு முடிவைம் ஜனநாயக அடிப்படையில் எடுப்பதோடு கீழிருப்பவர்களின் கருத்துக்கள் முடிவெடுப்பதில் தீர்மானகரமான பங்கு வகிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

9. கீழ்மட்டதிலிருந்து மேல்மட்டம் வரை அமைப்பு சனநாயகப்படுத்தப்பட வேண்டும். முறையான தேர்தல், முறையான பிளீனம், முறையான ஸ்தாபனங்க் கூட்டம் முதலியவை கூட்டப்பட வேண்டும்.

10. ராணுவம், அரசியல் அமைப்பு, புலனாய்வு, விசாரணை நடவடிக்கைக் குழு முதலியவை ஒன்றிலிருந்து ஒன்று சுயேச்சையாகவும் சனநாயக அடிப்படையிலும் இயங்குகிற அளவிற்கு ஒவ்வொரு அமைப்பும் அதற்கேற்ற வகையில் விதிமுறைகளை புனரமைத்துக் கொள்ள வேண்டும். தவறுகள், சந்தர்ப்பவாதங்கள் , தனிநபர் அராஜகங்கள் முதலியவை உடனடியாக விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டு தவறுகள் நீக்கப்படும் அளவிற்கு ஓட்டை உடைசலற்ற (Fool proof) சட்ட விதிகள் அமைக்கப்பட வேண்டும்.

11. அரசியற் கல்வியின் முக்கியத்துவத்தை ஏற்கனவே சுட்டிக் காட்டினோம். எந்த அரசியல் என்கிற கேள்வி எழுவது இயல்பு. இந்தக் கட்டுரைத் தொடக்கத்திலிருந்து முன் வைக்கப்படும் விவாதத்தின் அடிப்படையில் அது மார்க்சிய–

www.tamilarangam.net



லெனினியக் கல்வியே என்பது njsfî. ஏனவே விடுதலை அமைப்புக்களின் தத்துவமாக மார்க்சிய – லெனினியம் அறிவிக்கப்பட வேண்டும். பாட்டாளி வர்க்கத் தலைமையை ஏற்றுக் கொள்வதை அறிவிக்க வேண்டும்.

## 4 முடிவாக

இது ஒரு தேசிய விடுதலைப் போராட்டம். முதலாளி வர்க்கம் உட்பட இதர தேசிய வர்க்கங்களையும் இணைத்துத் தானே இதனை நாம் வென்றெடுக்க வேண்டும்? மார்க்சிய – லெனினிய தத்துவ வழிகாட்டல், பாட்டாளி வர்க்கத்தின் தலைமை என்பதெல்லாம் எந்த அளவிற்குச் சரி தமிழகத்தை பின்தளமாக வைத்துக் செயற்படுகிற சூழலில் இந்த அறிவிப்புக்கள் இந்திய அரசின் பார்வையில் ஏற்படுத்தும் மாற்றத்தைப் பற்றி யோசிக்க வேண்டாமா? – என்பன போன்ற நியாயமான கேள்விகள் எழுவது இயல்புதான்.

இது பாட்டாளி வர்க்க புரட்சிகர சகாப்தம் என்பதையும், இலங்கை ஒரு அரைக் காலனிய – அரை நிலப்பிரபுத்துவ நாடு என்பதையும், பெறுகின்ற விடுதலை பரந்துபட்ட மக்களின் விடுதலையாக அமைய வேண்டும் என்பதனையும், இந்திய மக்களையும், புரட்சிகர சக்திகளையும் விலக்கி விட்டு இந்திய அரசைக் கடந்த காலத்தில் முழுமையாகச் சார்ந்திருந்ததன் விழைவுகளையும் கவனத்தில் கொண்டு இந்தக் கேள்விக்கான பதில்களை நாம் தீர்மானிக்க வேண்டும்.

மேற்கண்ட அடிப்படையில் ஈழத்துச் சமூகப்படி நிலைகளை மறு உற்பத்தி செய்யும் நிறுவனமாக விடுதலை அமைப்புக்களை நாம் அமைத்துக் கொண்டால் விடுதலை இயக்கங்களில் நாம் தொடக்கத்தில் குறிப்பிட்ட தேக்கங்கள் தர்க்க பூர்வமான முடிவுதான் என்பதையும் உட்கட்சிப் போராளிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இடதுசாரி உட்கட்சிப் போராளிகளே! வளர்ந்து வரும் சக்திகள் நீங்களே! எதிர்காலம் உங்களுடையதே நம்பிக்கையோடு போராடுங்கள்!

---

# வங்காளப் போர் வெள்ளி விழா

## ஆக்கிரமிப்புப் போரா? விடுதலைப் போரா?

### வரலாற்றின் இருண்ட பக்கங்களில் இருந்து சில உண்மைகள்.

டிசம்பர் 16–ம் நாள் வங்கதேச விடுதலைப் போரில் இந்தியா வெற்றி வாகை சூடிய நாள்! மேற்குப் பாக்கிஸ்தானின் அடக்கு முறைக்கு ஆளாகி இருந்து அன்றைய கிழக்குப் பாக்கிஸ்தான், இந்தியாவின் உதவியோடு விடுதலையைச் சந்தித்தது. ''வங்கதேசம்'' என்ற புதிய நாடாக மலர்ந்த நாள்! இது வெறும் சம்பவம் அல்ல, சரித்திரம்! சாதனை!

– இப்படி 'தேசிய'ப் பத்திரிகைகள் அனைத்தும் வங்கப் போர் வெற்றியின் 25 – வது ஆண்டு நிறைவையொட்டி, அந்த நாளை நினைவு கூர்ந்து பக்கம் பக்கமாக எழுதுகின்றன. பிரதமரும் இராணுவ அமைச்சரும் முப்படைத் தளபதிகளும் வங்கதேசப் போர் 'தியாகி'களின் மலர் அஞ்சலி செலுத்துகின்றனர். அப்போரின் போது இந்தியத் தரைப்படைத் தளபதியாக இருந்த மானேக்ஷாவும், விமானப்படைத் தளபதியாக இருந்த நந்தாவும் இப்போது மீண்டும் கௌரவிக்கப்படுகின்றனர். ''இராயிரம் ஆண்டுகளில் இந்தியா இதுவரை கண்டிராத மிகப் பெரிய இராணுவ வெற்றியை இப்போரில் சாதித்தது. இந்தியாவின் பெருமையும் புகழும் உலகரங்கில் மேலும் உயர்ந்தது'' என்று போர்சாகசங்களைப்பற்றி ஓய்வு பெற்ற இராணுவத் தளபதிகளும், குறும்படைத் தலைவர்களும் 'தேசிய'ப் பத்தரிகைகளில் கட்டுரைகள் எழுதுகின்றனர்.

ஆனால் வங்கதேச விடுதலைப்போர் வெற்றியில் எந்து ஒரு இந்தியக் குடிமகனும் பெருமை கொள்ள முடியாது. ஏனெனில், இது அப்பட்டமான மேலாதிக்க ஆக்கிரமிப்புப்போர். ஈழத்தில் இந்திய இராணுவம் 'அமைதிப் படை' என்ற பெயரில் நுழைந்து ஆக்கிரமிப்பு அட்டூளியங்களில் ஈடுபட்டதை போலவே, 25 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய இரானுவம் வங்க தேசத்தைச் சூறையாடியது. இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கத்துடன் – அகண்ட பாரதக் கனவுகளுடனும் நடத்துப்பட்ட அநீதியான போர் தான் இது!

1960 – களின் இறுதியில், காங்கிரசை உடைத்து பாசிச இந்திரா செல்வாக்கிழந்து தனிமைப்பட்டிருந்த நேரம் அது. நாடாளுமன்றத்திலேயே சிறுபான்மை அரசாகத் தான் இந்திரா காங்கிரஸ் இருந்தது. தமது செல்வாக்கை உயர்த்திக் கொள்ளவும், அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும் பாக்கிஸ்தானைத் துண்டாடி வங்கதேசத்தை உருவாக்கும் மிகப்பெரிய இறங்கினார், இந்திரா.

அப்போது கிழக்குப் பாக்கிஸ்தானில், இராணுவ வெறியாட்டத்தால் கொதிப்புற்ற மக்களுக்கு முஜிபுர் ரஹ்மான் தலைமையேற்று, மேற்குப் பாக்கிஸ்தானிடமிருந்து சுயாட்சி உரிமைகோரிப் போராடி வந்தார்.

www.tamilarangam.net





அகண்ட பாரதக்கனவு நனவாகியது. வெற்றியைச் சாதித்த தரைப்படைத் தளபதி மானெக்ஷாவைப் பாராட்டும் பாசிச இந்திரா

வங்காளிகளான கிழக்குப் பாக்கிஸ்தானியர்கள் மேற்குப் பாக்கிஸ்தானில் இருந்து முற்றிலும் வேறுபட்ட தனித் தேசிய இனத்தவராவர். மேற்குப் பாக்கிஸ்தானின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற அவர்கள் நடத்திய போராட்டம் நியாயமானது. ஆனால் இப்போராட்டத்தை சாதகமாக்கிக் கொண்டு, விடுதலைப் போராட்டத்தைச் சீரழித்து இந்தியா மேலாதிக்கத்தின் கீழ், இந்திய விசுவாச ஆட்சியை கிழக்குப் பாக்கிஸ்தானில் நிறுவுவது என்ற நோக்குடன் இந்திராக் கும்பல் சதிகளில் இறங்கியது.

1963 – லேயே இந்திய உளவுப்படையான ஐ.பி (IB) யின் தலைவராக இருந்த சங்கரன் நாயர் மூலம் முஜிர் ரஹ்மான் ஆட்களுக்கு ஆயுத உதவி செய்த இந்திய அரசு உசுப்பி விட்டது. டாக்கா ஆயுதக் கிடங்கை முஜிர் ரஹ்மானின் குழுவினர் கொள்ளையிட முயன்று தோற்றனர். அகர்தலா சதி வழக்கில் இந்திய உளவுத் துறையின் பங்கு அம்பலமாகி, துணைக் கண்டமெங்கும் நாறியது. பின்னர் பாக்கிஸ்தானில் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்ட நெருக்கடியையும், மக்களது சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டங்களையும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு மீண்டும் 1968 இல் வங்க தேசத்தை உருவாக்கும் சதிகளில் பாசிச இந்திராவும் ''ரா'' உளவுப்படையினரும் இறங்கினர். மீண்டும் சங்கரன் நாயர் தலைமையில் கொரில்லாக் குழுக்களும், உளவாளிக் குழுக்களும் கட்டி அமைக்கப்பட்டன.

பின்னாளில் ''முக்திபாகினி'' என்றழைக்கப்பட்டு முஜிபுரின் இரானுவத் தளபதியாக இருந்த கர்னர் ஒஸ்மானி, மேஜர் சைபுல்லா, ''புலி சித்திக்'' என்றழைக்கப்பட்ட அப்துள் காதர் சித்திக் ஆகியோருக்கு ''ரா'' நேரடியாகவே பயிற்சி அழித்தது.

1970 – ல் முஜிபுர் ரஹ்மான் கைதானதைத் தொடர்ந்து வங்க தேசத்தில் மக்கள் போராட்டங்களில் இறங்கினர். வங்காளிகளான கிழக்குப் பாக்கிஸ்தான் மக்கள் மீது உருது மொழி கட்டாயப்படுத்தி திணிக்க ப்பட்டதை எதிர்த்து மொழியுரிமை – சுயாட்சி உரிமை போராட்டங்கள் தீவிரமடைந்தன. அதைத் தொடர்ந்து முஸ்டாக் அகமது என்பவர் தலைமையில் வங்கதேச இடைக்கால அரசை நிறுவி, கல்கத்தவில் உள்ள காங்கிரசு அலுவலகத்தில் இருந்தே முஜிபுரின் ஆட்கள் அறிக்கை வெளியிட்டனர். முஜிபுர் நிறுவியுள்ள ''முக்தி பாகினி'' படையின் போராளிகள் தமது சொந்த முயற்சியால் வங்க தேசத்தின் ஒரு பகுதியை விடுவித்து, இடைக்கால அரசை முஜிப் நகரில் அமைத்து செயற்படுவதாக இந்திய அரசும் 'தேசிய'ப்பத்திரிகைகளும் கூசாமல் புளுகின. ''ரா''வின் ஏஜெண்டுகளும் இரகசியக் கொலைக் குழுக்களும் முஸ்லீம்களைப் போல வேடம் அணிந்து வங்க தேசத்தில் (கிழக்குப் பாக்கிஸ்தானில்) ஊடுருவி, பாலங்களைத் தகர்ப்பது, சொத்துக்களைச் சூறையாடுவது முதலான பயங்கர வாத நடவடிக்கைகளில் இறங்கினர்.

மறுபுறம் முஜிபுரின் துரோகத்தை எதிர்த்து, புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் நாட்டை விடுதலை செய்ய ஆயுதமேந்திய மார்க்சிய – லெனினியப் புரட்சியாளர்கள் முன்னேறிய போது, அவர்கள் ''ரா'' ஏஜென்டுகளால் இரகசியமாகக் கொண்றொழிக்கப்பட்டுனர்.

கிழக்குப் பாக்கிஸ்தானில் மக்களது சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டும் தீவிரமானதும், மேற்குப் பாக்கிஸ்தானின் ஆட்சியாளர்கள் இராணுவத்தைக் குவித்து, கடும் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுனர். அடக்கு முஜறக்கு அஞ்சிய கிழக்குப் பாக்கிஸ்தானிய மக்கள் இந்தியாவின்மே, வங்கம், அசாம், திரிபுர மாநிலங்களில் அகதிகளாக வந்து குவியத் தொடங்கினர். அகதிகளில் இளைஞ்ஞர் பலர் முக்தி பாகினி படையைச் சேர்ந்தவர்கள் என்று கூறி, அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து, அவர்களை முன் நிறுத்தி இந்திய உளவுப்படையினர் கிழக்குப் பாக்கிஸ்தானில் ஊடுருவி பயங்கர வாத சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பின்னர் அகதிகள் பெருக்கத்தைக் காரணம் காட்டியும், மேற்குப் பாக்கிஸ்தானின் போர் வெறி அச்சுருத்துலை முறியடிப்பது என்ற பெயரிலும், அண்டை நாட்டின் விடுதலைக்கு உதவுவது என்றும் கூறிக் கொண்டு இந்திய இராணுவம் 1971 டிசம்பர் 3ம் நாளன்று கிழக்குப் பாக்கிஸ்தான் மீது போர் தொடுத்தது. 12 நாட்கள் நடந்த போரிர் இந்தியா வெற்றி பெற்று மேறகுப் பாக்கிஸ்தான் படைகளைச் சரணடையச் செய்தும், டிசம்பர் 16ம் நாளில் வங்க தேசம் என்று புதிய நாடு உருவாக்கப்பட்டது.

இந்திய அரசின் பலத்தையும் ஆதரவையும் கொண்டு முஜிபுர் ரஹ்மான் வங்க தேசத்தின் அதிபரானதோடு, மாபெரும் சுதந்திர போராட்ட வீரராகவும் சித்தரிக்க ப்பட்டார். இந்தியத் தரகு பெரு முதலாளிகளின் தொழிலுக்கும், வர்த்தகத்திற்கும் புதிய வாய்ப்புகள் பெருகியதால், இந்திய ஆளும் வர்க்கங்கள் இந்திராவை உச்சி மோர்ந்து பாராட்டின. விடுதலைக்குப் பாடுபட்ட வீராங்கனையாக சித்தரிக்கப்பட்டு அவரது செல்வாக்குப் பெருகி, 'அன்னை இந்திரா' என்றழைக்கப்பட்டார். வங்க தேசப் போருர்க்குப் பிறகு நடந்த இந்தியப் பொதுத் தேர்தல்ல் பாசிச இந்திரா

www.tamilarangam.net



கும்பல் பெரும் வெற்றியைச் சந்தித்தது. ஆனால் இந்தியாவின் தயவில் ஆட்சிக்கு வந்த முஜிபுர் ரஹ்மான், வங்கதேசப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாமல், ஒரு கட்சி சர்வாதிகாரத்தைக் கொண்டு வந்து, பின்னர் நடந்த ஆட்சிக் கவிழ்பில் சுட்டுக் கொல்லப்பட்டார். இராணுவத் தளபதி ஜியாவுர் ரஹ்மான் வங்கதேசத்தின் அதிபரானார்.

வங்க தேசப் பொரானது இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்களுக்காக மட்டுமின்றி, ரஷ்சிய மேலாதிக்க வல்லரசின் சனல் தேவைக்காகவும் நடத்தப்பட்டது. அன்றைய கிழக்குப் பாக்கிஸ்தான் சனல் விளையும் வளமான பூமியாகும். ஆனால் சனல் இழை, சாக்கு தயாரிப்பு ஆலைகள் பெருமளவில் இந்தியாவில் தான் இருக்கின்றன. அன்று ரஷ்சியாவின் தொங்கு சதையாக இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சனல் தேவையை ஈடு செய்ய, கிழக்குப் பாக்கிஸ்தானை தமது உற்பத்தியின் பின் நிலமாக மாற்றிக் கொண்ட ஆதிக்கம் செய்ய வேண்டிய அவசியமும் ரஷ்சியாவுக்கு இருந்தது. எனவேதான் தொற்காசியாவில் தனது விவசாயக் கூட்டாளியாகவும், பிராந்திய வல்லரசுமான இந்தியாவை கொம்பு சீவி விட்டது. வங்கதேசத்தில் விசுவாசமாக பொம்மை ஆட்சியை நிறுவி மேலாதிக்கம் செய்வதன் மூலம் சனல் உற்பத்தி மற்றும் ஏற்றும் மதியில் கொள்ளை இலாபம் ஈட்டுவதற்கான வாய்ப்புப் பெருகும் என்பதால் இந்திய ஆளும் வர்க்கங்கள் அகண்ட பாரதக் கனவுடன் வங்க தேசப் போரை ஆதரித்தன. ஆளும் வர்க்கங்களின் நோக்கம், நாட்டின் இலட்சியமாக மாறி அனைத்து ஓட்டுக் கட்சிகளும் வங்க தேசப் போரை ஆதரித்து தேசிய வெறியூட்டின.

போலிக் கம்யூனிஸ்டுக்களே, மேலாதிக்க வெறிபிடித்த அநீதியான இப்போரை அம்பலப்படுத்தி முறியடிப்பதற்குப் பதிலாக, ரஷ்சிய குரு பீடத்தின் கட்டளைப் படி, இப்போரை வெட்கமின்றி ஆதரித்தனர். ''இந்திராவின் வெளியுறவுக் கோள்கை முற்போக்கானது, உள்நாட்டுக் கோள்கைகள் தான் பிற்போக்கானது'' என்று பித்தலாட்ட விளக்கம் அளித்துக் கொண்டு 'மார்க்சிஸ்டு'க் கட்சி பாசிச இந்திராவுக்குப் பல்லக்குத் தூக்கியது. வலது



வங்கதேசத் தலைநகர் டாக்காவில் இந்தியப் படைகளை வழி அனுப்பும் விழாவில் கைக் கூலி அதிபர் முஜிபுர் ரஹ்மான்

கம்யூனிஸ்டுக்களோ இந்திராவின் ஊதுகுழலாக மாறி அநீதியான இப்போரை ஆதரித்து நின்றதோடு, பின்னாலில் இந்திராவின் அவசர நிலை பாசிச ஆட்சியையும் ஆதரித்து காங்கிரசின் வாலாக மாறினர். அன்று வங்கதேச ஆக்கிரமிப்புப் போரை நக்சல் பாரி புரட்சியாளர்கள் மட்டுமே அம்பலப்படுத்தி எதிர்த்து நின்றனர்.

இப்போரின் போது தனது நம்பகமான கூட்டாளியான பாக்கிஸ்தான் துண்டாடப் படுவதை எதிர்த்த அமெரிக்கா, தனது ஏழாவது கப்பற் படையை இந்துமாக்கடலில் கொண்டுவந்து நிறுத்தி அச்சுறுத்தியது. ஆனால் விடுதலைப் பொருக்கு உதவுவதாகக் கூறிக் கொண்டு இந்தியா கபட நாடகமாடியதாலும், மேற்குப் பாக்கிஸ்தானின் சர்வாதிகாரத்துக்கு எதிராக வங்க தேச மக்கள் போராடி வந்ததாலும், இப்போரில் தலையிட்டால் மேலும் உலக அரங்கில் அம்பலப் பட்டுதனிமைப்பட நேரிடும் என்பதால் அமெரிக்க வல்லரசு தற்காலிகமாகப் பின்வாங்கிக் கொண்டது.

வங்க தேசப் போரின் போது இந்திய இராணுவம் நடத்திய அட்டூழியங்களையும், சூறையாடல் – பாலியல் வன்முறைகளையும் விளக்குவதற்குப் பக்கங்கள் போதாது. ஈழத்தில் அமைதி நிலைநாட்ச் செல்வதாகக் கூறிக் கொண்டு, தமிழச்சிகளை பாலியலான பலாத்காரம் செய்த இந்திய இராணுவம், வங்க தேசத்தில் எத்தகையதொரு வெறியாட்டத்தை நடத்திய இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

வங்கதேச ஆக்கிரமிப்புப் போர் பற்றிய பல உண்மைகள் இந்நாட்டு வரலாற்றின் இருண்ட பக்கங்களிலே புதைந்து கிடக்கின்றன. நடுநிலை நாயகன், சமாதானச் சிற்பி என்று ஓயாது பிரச்சாரம் செய்யப்படும் பரம்பரையின் விரிவாக்க – மேலாதிக்க – ஆக்கிரமிப்பு வெறிகள் அவற்றிலே தெளிவாகத் தெரிகின்றன. இப்படிப்பட்ட வரலாற்று உண்மைகள் தொடர்ந்து மறைக்கப்படுவதால் தான் அண்டை நாடுகளுக்கு எதிராக தேசிய வெறியையும் பகைமையையும் தூண்டி ஆளும் வர்க்கங்கள் ஆதாயமடைய முடிகின்றது. பாக்கிஸ்தான், வங்கதேசம், இலங்கை , மாலைதீவு, நேபாளம் என அண்டை நாடுகள் அனைத்திலும் இந்தியாவின் விரிவாதிக்க மேலாதிக்க ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நீடிக்கின்றன. இந்த உண்மைகளை உணர்ந்து நாட்டு மக்களின் நலனுக்கு எதிரான இத்தகைய மேலாதிக்க வெறியை உழைக்கும் மக்கள் விழிப்புடன் இருந்து முறியடிக்க வேண்டிய தருணமிது.


(இக்கட்டுரை புதிய ஜனநாயகம் என்ற பத்திரிகையில் தை மாத இதழில் வெளியானது இக்கட்டுரை இன்றை நிலையில், எப்போதும் மற்று அரசுகளுடன் கூட்டு வைத்து தமிழீழத்தை உருவாக்க நினைக்கம் சக்திகளுக்கு முன்னுதாரணமாக இருக்கம் என்ற நோக்கில் நாம் மீள் பிரசுரம் செய்கிறோம்.)

சுமைகள்

www.tamilarangam.net



# உழைப்பாளர் தோழர்களின் வெளிநடப்பும் சிறுவர்கள் உழைப்பை மாநாடும்!



ஐப்பசி மாத இறுதி வாரத்தில் சிறுவர் தொழிலாளர்கள் பற்றி மாநாடு நோர்வேயில் இடம் பெற்றது. இதில் பல நாடுகளில் இருந்து முன்னாள் தொழிலாளர்களான சிறுவர்களும், 27 அமைச்சர்களும் பங்கு பற்றினர். இந்த மாநாடு எந்த விதமான ஆச்சரியமும் இல்லாது சமரசம் கொண்டதாக முடிவுற்றது. இந்த மாநாட்டில் இருந்து நிக்கிரகுவா நாட்டில் இருந்து வந்த சிறுவர்கள் வெளிநடப்புச் செய்தது இம்மாநாட்டில் முக்கிய நோக்கமாகும்.

- அக்கீரிக்க முடியாத தொழில்களாக கருதப்படும் – விபச்சாரம், அடிமைத் தொழில் முறை, என்பனவற்றுடன் சிறுவர்களை உடல், உள ரீதியாக வதைக்கும் அல்லது பாதிக்கும் தொழில்களையும்
- இவற்றிற்கு மாற்றீடாக கல்வி வசதியைச் செய்யு சிபாரிசு செய்கின்றது.
- ஒவ்வொரு நாடும் தேசிய மட்டத்தில் செயற்திட்டத்தை வகுப்பதுடன், காலவரையறையைத் தாமே நிர்ணயிக்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளதுடன்,

நீண்ட கால வேலைத்திட்டமாக சிறுவர்கள் உழைப்பை முற்றாக ஒழிப்பதே தமது இலக்கு என முடிவெடுத்துள்ளனர். இந்த மாநாட்டில் சிறுவர்கள் தகுந்த முறையில் தம்மைத் தாமே பிரதிநிதித்துவம் செய்ய அனுமதிக்கவில்லை எனவும் தமது விண்ணப்பக் கடிதங்களுக்கு ஆனி மாதத்திலிருந்து அமைச்சர்கள் தகுந்த பதில்களைத் தரவில்லை எனவும் கூறினர். அத்துடன் தாம் ஏற்பாட்டாளர்களின் முடிவுகளுக்கு இசைவாக நடந்து கொள்ளும் படி நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும், தமது குரலைச் செவிசாய்க்காது தம்மை பொய்யர்கள் என குற்றம் சாட்டியதாகவும் இது தான் ஜனநாயகம் என தமது வாய்களுக்கு பிளாஸ்டர்களை ஒட்டிக் கொண்ட சிறுவர்கள் முறையிட்டனர். இவர்கள் மாநாடு நடந்த இடமான SAS ஹோட்டலிலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நுழைய அனுமதிக்கவில்லை. பின்னர் இவர்கள் மண்டபத்திற்கு முன்பாக நின்று மறியல் செய்தனர். மேலும் லத்தீன் அமெரிக்க சிறுவர்கள் இவ்வாறான நிறுவனங்களின் நடவடிக்கைகளினால் தமது வேலைத் தளங்களில் தாம் இம்சிக்கப்பட்டதாகவும், தமது பிழைப்பில் மண்ணை அள்ளிப் போடுவதாகவும் குற்றம் சுமத்தினர். இந்த மாநாட்டிற்கு சமூகத்தின் பிரச்சினையல் உண்மையாக அக்கறை கொள்பவர்களை அழைப்பு விடுத்திருப்பார்கள் என என்னுவது மடைமைத்தனம் எந்த மாநாட்டிற்காவது பஞ்சப்பராரிகளையும், புரட்சியாளர்களையும் அழைக்கமாட்டார்கள். இந்த மாநாட்டில் கலந்து கொண்டது தமது வயிற்றை நிரப்ப வழியில்லாது தவிக்கும், தமது உடலில் நோய் உள்ளது எனக் கண்டு தமது நோயை மாற்ற சிறுகச் சிறுக பணத்தைச் சேகரித்து, அதன் பின்னர் தமது நோயைக் வைத்தியரிடம் காட்ட முன்னரே தமது உயிரை இழப்பவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. உறைவிடம் இல்லாது தெருக்களில் படுத்து எழும்பும் கூட்டமும் இல்லை. இவர்கள் எத்தனை மாநாடு தான் கூட்டினாலும் இவர்களால் சிறுவர்கள் உழைப்பை தடுத்து நிறுத்த முடியாது. ஏனெனில் முதலாளித்துவத்தின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட சிறுவர் உழைப்பானது முதலாளித்துவத்தைச் சமாதிக்கு அனுப்பிய பிற்பாடே அனைத்து வகை சிறுவர் உழைப்பபை முடிவிற்கு கொண்டு வரமுடியும் தாராளமாக இப்படிப்பட்ட மாநாடுகளை வருடத்திற்கு ஒன்று என்ன வாரத்துக்கு ஒன்றும் நடத்திக் கொண்டிருக்கலாம். நிச்சயமாக கதைகளில் மாத்திரம் தமது சக்தியைச்

www.tamilarangam.net



செலவளிப்பவர்களால் முடிவிற்கு கொண்டு வரமுடியாது. சிறுவர்களின் உழைப்பபை முற்றாக நிறுத்துவதற்கு தடையாக இருப்பது இந்த ஏகாதிபத்தியங்களே. இவர்களே அடுத்த கட்டத்திற்கு எமது சமூகத்தை நகர்த்த விடாது தமது சுரண்டல்களின் மூலம் ஸ்தம்பிதம் அடைய வைப்பவர்கள். இவர்கள் மாநாடு கூட்டிக் கதைப்பதற்கு முன்பாகவே எத்தனையே புரட்சியாளர்கள் இந்த அநீதிக்கு எதிராக போராடுகின்றனர். அப்படிப்பட்ட தியாக உள்ளம் கொண்ட போராளிகளை ஒடுக்குவதற்கு ஆயுதங்களை கொடுத்து அழிப்பில் ஈடுபடுபவர்களும் இவர்களே. மாநாடு நடக்கும் நாடே துருக்கியில் குர்டர்களை அழிப்பதற்கு ஆயுதங்களை விற்பனை செய்பவர்கள் இந்த ஆயுதங்களினால் கொல்லப்பட்ட நிலையில் தமது குடும்பங்களை காப்பாற்று இளைஞர்களும், யுவதிகளும் தமது சிறுபராயத்தை தமது குடும்பத்தைப் போக்காட்டவே செலவிடு கின்றனர். இவ்வாறாக லாபமாக பெற்ற பணத்தை எமக்கு நன்கொடையாக அளிப்பதாக பாசாங்கு காட்டுகின்றனர்.

நோர்வே அரசு 200 மில்லியன் குரோணர்களை சிறுவர் உழைப்பை ஒழிப்புத் திட்டத்திற்கு பயன்படுத்த உதவுவதாக பிரதமர் அறிவித்துள்ளது தெரிந்ததே. அமெரிக்க ஏகாதிபத்தியக் கொம்பனியான போபால் இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் முறையாக நிர்வாரணம் கிடையாது தெருக்களில் பிச்சை எடுப்போர் எத்தனை ஆயிரம் மக்கள், இவர்களின் சுரங்கங்களிலும், தொழிற்சாலைகளிலும் தமது இளமைக் காலங்களைச் செலவளிப்பவர்கள் எத்தனை கோடிப் பேர். இப்படியே கூலியை அதிகமாகக் கேட்டு போராடி ஆயுதப்படைகளினால், கருப்புச் சட்டங்களினால் அடக்கப்ப ட்டவர்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. ஏகாதிப த்தியங்களின் பொருளாதார நலனுக்காக ஈராக்மீதும், கியூபா, லிபியா, வட கொரியா போன்ற நாடுகளின் மீது ஏற்படுத்தப்பட்ட தடைகளினால், மேற்கொண்டு யுத்தங்களினால் நிர்க்கதி யாக்கப்படுவர்கள் சிறுவர்களே இது பற்றி இந்த மாநாட்டில் கதைக்க மாட்டார்கள். இவ்வாறான நிலைகளை கவனத்தில் கொள்ளாது தாராளமாக மேடைகளில் இருந்து கதைக்க முடியும். இவர்கள் எல்லாம் மேடைகளில் இருந்து பேசுவதற்கு என்றே பணம் படைத்தவர்கள் உருவாக்கியே விட்டிருக்கின்றனர். முதலாளிகள் கொடுக்கும் ஊதியத்திற்கு ஜனநாயகம் கதைக்கின்றனர். அது அவர்கள் சம்பளத்திற்கு வேலை பார்ப்பவர்கள் இவர்களின் பிரச்சாரத்திற்கு பலியாகமல் எல்லா நாடுகளிலும், எல்லா தேசங்களிலும் உள்ள புரட்சிவாதிகள் குறுகிய தேசிய, வகுப்புவாத சிந்தனையை விட்டுவிட்டு ஏகாதிபத்திய சுரண்டலாளர்களுக்கும், இவர்களுக்கு துணைபோகின்ற உள்நாட்டு ஆட்சியாளர்களையும் இல்லாது ஒழிக்க போராடுவதே முக்கிய பணியாகும். போராடாவிடின் சிங்கள, தமிழ், மலையக, முஸ்லீம் சிறுவர்களின் உழைப்பு முதலாளிகளின் வயிற்றை நிரப்பவே பயன்படும். இளமைக் காலங்கள் எல்லாம் நாட்டின் ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு பயன்பட முடியாது வீணாகப் போகும்.

# தமிழ் மக்கள் இசை விழா

தமிழ் மக்கள் அதாவது உழைக்கும் மக்களிடம் இருந்து படிப்படியாக களவாடப்பட்ட தமிழ் இசை கடந்த பல நூறு வருடங்களாக இந்திய ஆளும் வர்க்கத்திற்கும், பார்ப்பனியத்திற்கும் சேவையாற்றி வந்தது, சேவையாற்றிக் கொண்டிருக்கின்றது. இதன் தொடர்ச்சிதான் வருடாவரும் மார்கழி மாதம் திருவையாற்றில் நடைபெறும் கர்நாடக இசைவிழா. எங்கிருந்தோ வந்த ஆரியரிடம் தங்கள் இறைமையை, உழைப்பை, கலாச்சாரத்தை பெருமை யாவற்றையும் இழந்து சில ஆயிரம் வருடங்கள் கடந்து பின்னரும் தமிழ் மக்கள் விழிப்பற்று குருடர்களாய் மயங்கிக் கிடந்த நிலையில் தமிழ் நாட்டு – மக்கள் கலை இலக்கியக் கழகம் (ம.க.இ.க) புதியதோர் எழுச்சியுடன் புரட்சிகர உணர்வுடன் தமிழ் மக்கள் இசைவிழாவின் இரண்டாம் வருட நிகழ்சியை மதுரையில் 1995இல் சிறப்பாக நடத்தி முடித்துள்ளது.

தமிழ் மக்கள் இசை விழாவின் முக்கிய நோக்கமே ஆரிய பார்ப்பானிய இந்திய ஆளும் வர்க்க சார்பான கர்நாடக இசை விழாவிற்கு மாற்றீடாக இதை வருடா வருடம் நடத்துவதும், களவாடப்பட்ட இசையை மீட்டெடுத்து, இன்னும் புதிய முறையில் புது மெருகூட்டி உலகமெல்லாம் பரப்பும் வகையில் முன்னேற்றுவதுமாகும். இந்த வகையில் ம.க.இ.க இன் பங்களிப்பு சிறப்பான முறையில் அமைந்துள்ளது. இம் முயற்சியில் புதிய எழிர்சியும்

www.tamilarangam.net



தேடலையும் பரந்து பட்ட மக்கள் மத்தியில் கால ஓட்டத்தில் எடுத்துச் செல்லும் என்பது மறுக்க முடியாததே. இந்த வகையில் தமிழ் மக்களாகிய நாம் தமிழ் நாட்டு ம.க.இ.க தோழர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இனி தமிழ் மக்கள் இசைவிழா நிகழ்சி பற்றிய முதலாவது ஒலிப்பேழை இவ்விழாவிற்கு தலைமை தாங்கிய தோழர் மருதையனின் அறிமுகவுரை ஆகும். அவர் தனதுரையில் இவ்விசை விழாவிற்கு எவ்வாறு பார்ப்பனிய ஜெயா ஆட்சி அனுமதி வழங்காது குழப்ப முயற்சி செய்தது என்பதும் பின் நீதிமன்றம் சென்றே அதுவும் கடைசி நேரத்தில் அனுமதி பெற்று நடத்த முடிந்தது என்பதையும் குறிப்பிடுகின்றார்.

அவர் தனதுரையில் இரு முக்கிய விடையங்களை பிரதானமாகக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன 1) ரகுமானின் புதிய வருகையுடன் தமிழ் சினிமாவிலிருந்து கூட மக்கள் இசை புறந்தள்ளப்படுகின்றது. 2) ஏகாதிபத்திய ஊடுருவல் மூலம் (உலகளாவிய) தமிழிசை குழப்பப்படுகின்றது.

தமிழ் சினிமாவில் ''அன்னைக்கிளி'' படத்தின் மூலம் தமிழ் மக்கள், தமிழ் மக்கள் இசையை மக்கள் மத்தியில் கொண்டு வந்த இளையராஜாவின் (வியாபாரநோக்கிலான) முயற்சியும் பின் இன்று முதன்மை இசையமைப்பாளரான ரகுமானின் வருகையுடன் மக்கள் இசை புறந்தள்ளப்பட்டு ஒரு குழப்ப இசைவடிவம் மக்கள் முன் வைக்கப்படுகின்றது. ( உ—ம் முக்கால.... முக்காப்பிலா) இது பற்றி ஆழமான ஆய்வு பேராசிரியர் கே. ஏ குணசேகரனின் உரையில் விபரமாகக் கூறப்பட்டுள்ளது. பின்னர் இதை விபரமாகப் பார்ப்போம்.

இன்று புதிய உலக ஒழுங்கமைப்பை நாடி நிற்கும் ஏகாதிபத்தியங்கள் தமதமை ப்பைப் பேணுகின்ற ஓர் வடிவமாக கலாச்சார ஊடுருவலை மிக சிறப்பாக தந்திரமாகக் கையாளுகின்றார்கள். இதற்கு தொலைத் தொடர்பு சாதனங்கள் முக்கியமாக T.V (starTV, MTV...) ஊடாக ஏகாதிபத்திய கலாச்சார ஊடுருவல் பரந்தளவில் உலக மக்கள் மத்தியில் கொண்டு செலுத்தப்படுகின்றது. அந்த வகையில் இவ்வூடுருவல் மூலம் தமிழ் இசையில் ஓர் குழப்பம் ஏற்படுத்தப்படுகின்றது. இதை தமிழ் மக்களாகிய நாம் இன்று தடுத்து நிறுத்தாவிடில் இதற்கு எதிராகப் போராடி தமிழ் மக்கள் இசையை பாதுகாக்காவிடில் எவ்வாறு கடந்த காலத்தில் எம்மிசையை ஆரிய பார்ப்பண ஆளும் வர்க்கத்திடம் இழந்தோமோ அதே நிலமையே திரும்பவும் ஏற்பட்டு தமிழிசை அழிந்து விடும். அத்துடன் அவர் தனதுரையில் கலை மக்களுக்காகப் படைக்கப்பட வேண்டும் என்பதை திட்ட வட்டமாக வலியுறுத்தினார்.

இவ்விழாவில் மிக முக்கியமாக மக்களைக் கவர்ந்த விடையத்தை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இந்நிகழ்சியின் ஆரம்ப இசையாக, மங்கள இசையாக, மக்கள் இசையாக பறை அடிக்க ப்படுகின்றது. நாம் அறிந்தவரை பறைமேளம் வாசிக்கப்படுவது இரு சந்தர்ப்பங்களில் தான். 1) மரண வீடு 2) அம்மன் கோவில் திருவிழா (அதுவும் கூட கோவிலுக்கு வெளி வீதியிலே தாழ்த்தப்பட்ட சமூகத்தினரால் (அடிக்க) வாசிக்க அனுமதிக்கப்படும்.)

ஆனால் இன்று ஒடுக்கப்பட்ட மக்கள் இசையை ஓர் இசைவிழாவில் மங்கள இசையாக, ஆரம்ப இசையாக முளங்கியதன் மூலம் மக்கள் (ஒடுக்கப்பட்ட) இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மக்கள் கௌரவிக்கப்பட்டு உத்வேகம் ஊட்டுப்படுகின்றார்கள், சிந்திக்க வைக்கப்படுகின்றார்கள். ஆரிய பார்ப்பண ஆளும் வர்க்கம் எவ்வாறு திட்டமிட்டு மக்களை ஒடுக்கியது என்பதுடன் அவர்களது கலை வடிவங்களைக் கூட ஒடுக்கி வைத்துள்ளது என்பது ஆழ்ந்த கவனத்திற்குரியது. இன்று தமிழீழத்தில் சாதி என்பது ஒரு கலாச்சார வடிவத்தில் மாத்திரம் பேணப்பட்டுள்ளது. இந்நிலையில் உயர்சாதி (யாழ்பாண) மரண வீடுகளில் பறைமேளம் வாசிப்பவர்கள் எவ்வாறு சாதி வெறியர்களால் அகௌரவப்படுத்துப்படுகின்ற காட்சியை நாம் கண்டுள்ளோம். இது உண்மையில் மனித நேயமற்ற கண்டிக்கத்தக்க செயற்பாடே. தமிழீழ தேச விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்துடன் சில விடுதலை இயக்கங்கள் சாதி ரீதியிலாக இக் கலாச்சார ஒடுக்கு முறைகளைச் சாடிய போதிலும் அதை தமக்கு ஓர் ஆள்திரட்டும் அம்சமாகவும் பயன் படுத்தினார்கள். இந்த வகையில் பறைமேளம் அடிக்கும் சமூகத்தவர்கள் உயர்சாதி ஆட்களின் மரண வீடுகளில் பறைமேளம் அடிப்பதை தடைசெய்ததுடன் சில இடங்களில் இக்கருவிகளை (மேளத்தை) மக்களிடமிருந்து பறித்து உடைத்து எரித்தார்கள். அப்போது எனக்கும் இது சரி போன்றே தென்பட்டது. ஆனால் எனது நண்பர் ஒருவர் சொன்னார் (மார்க்சியவாதி) ''இது ஒரு பிழையான செயல் உண்மையில் இக்கலையை ஒரு முதலாளித்துவ வடிவத்திற்கு வளர்த்தெடுக்க வெண்டுமே ஒழிய மேளத்தை உடைக்தெறிவது அராஜகச் செயல்'' இது நடைபெற்றது 84—85 காலகட்டமென நினைக்கின்றேன். ஆனால் கால ஓட்டத்தில் எமது போராட்டமும் போராளிகளும் குறுந்தேசியவாத, அராஜக, சிறு முதலாளித்துவ, பாசிச தலைமைகளின் பின் சென்றதோடு எல்லாமே தேடலற்ற ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்து விட்டன. அது மாத்திரமல்ல தேடலை எரித்ததோடு அதே பழைய நிலையை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பேணுகின்ற, பாதுகாக்கின்ற ஒரு நிலையே இன்று காணமுடிகின்றது.

ஆனால் ம.க.இ.க வின் அனைத்து ஒலி நாடாக்களும் பறை மோளத்துடன் தொடங்கி பறைமேளத்துடன் முடிவடை கின்றன. இதன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்கள் கலைக்கு மார்க்சிய, லெனினிய வாதிகளால் ஒரு அந்தஸ்தை பெற்றுக் கொடுக்க முடிந்துள்ள. இவ்வளவு காலமும் ஊரிலே பறை மேளம் கேட்டால் ஒரு மரண வீடு (ஒரு அமங்கலமான நிகழ்ச்சி) என்று சிந்தித்த நான் இன்று ம.க.இ.க வின் பறை முழக்கத்துடன் இவ் விசையை ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியின் போர் பறையாக கருதுகின்றேன்.

இவ்விசைவிழாவில் பேராசிரியர் தோழர் கே. ர. குணசேகரனால் ''தமிழ் மக்கள் (ஒடுக்கப்பட்ட மக்கள்) இசைவடிவங்கள்'' என்ற தலைப்பில் பேருரை ஆற்றப்பட்டது. அவர் தனது இனிமையான குரலில் நாட்டார் பாடல்களிலுள்ள பல இசை வடிவங்களை பாடிக் காட்டியதுடன் அவற்றிற்கு உரிய இசையும் மிகச்சிறந்த

www.tamilarangam.net



கலைஞர்களால் வழங்கப்பட்டது. இது அவரது உரையை ஆர்வமாகத் தொடர்ந்து கேட்பதற்கு ஆர்வமாக உள்ளது. பேராசிரியர் கே.ர. குணசேகரன் அவர்கள் இராமநாத மாவட்டத்தை சேர்தவர் என்பதுடன் தனதிளமைப் பருவத்தில் நாட்டார் இசை (மக்கள் இசை) யுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தார் என்பதும் தெரியவருகிறது. அத்துடன் அவர் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் துன்ப துயரங்களை அறிந்ததுடன் அவர்களின் புதிய மீட்சி சார்பான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டவர் என்பதும் புரிய முடிகின்றது. இந்த வகையில் இன்றுள்ள சுரண்டல் அமைப்பின் மேல் அதன் பாது காவலர்களான ஆளும் வர்க்கத்தின் மேல் இயற்கையாகவே கோபம் கொண்டுள்ளார் என்பது அவரின் ஒவ்வொரு வார்த்தையிலும் புலப்படுகிறது. அடுத்து அவரின் தார்மீகக் கோபத்திற்குரிய காரணம் தமிழ் மக்கள் இசை அதாவது ஒடுக்கப்பட்ட மக்களின் இசை ஆரிய பார்ப்பன ஆளும் வர்க்கத்தால் களவாடப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டு (இன்று கர்நாடக இசை என அழைக்கப்படுகின்றது. இதை அவர் தனதுரையில் உரிய ஆதாரத்துடன் நிருபித்துள்ளார்.) கர்நாடக இசையின் தந்தை என்று அழைக்கப்படுகின்ற தியாகராஜ ஐயர் என்ற தெலுங்கான் எவ்வாறு தமிழ் இசையை களவாடினார் என்று வரலாறு அவரால் புட்டுக் காட்டப்பட்டது.

அவர் தனது ஆராய்ச்சியின் முடிவாக முக்கியமான விடையத்தை தமிழ் மக்கள் முன் வைத்துள்ளார். இது அனைவரின் கவனத்திற்கும் தேடலிற்கும் ஆராய்ச்சிக்கும் உரிய விடையம். கர்நாடக இசையின் இசை (?) வடிவமான ச.ரி.க.ம.ப.த.நி. இதற்குப் பதிலாக மாற்றீடாக தமிழ் இசை வடிவத்தை ஒழுங்கமைத்து புதிய சூத்திரத்தை கண்டு பிடிப்பதற்குரிய வழி வகைகளை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

இன்றைய விஞ்ஞானக் கணனி உலகில் தமிழ் எழுத்து வரிவடிவம் புதிய மாற்றத்தைக் கோரி நிற்கின்றதே அதேபோல் தமிழ் இசை வடிவமும் புதிய நடைமுறையைக் கோரி நிற்கின்றது. மேலும் அவர் குறிப்பிட்டதைப் போல் இன்றுள்ள புதிய நிலைமைக்கு முகம் கொடுக்கின்ற பலம் தமிழ் மார்க்சிய லெனினிச சக்திகளிடம் மட்டும் தான் உள்ளது என்பது தெட்டுத் தெளிவானதே. அவர்களால் தான் ஒரு தேடலை, ஆக்கத்தை கொண்டு வர முடியும். மாறாக இதை எரிப்பவர்கள் அல்ல.

கடந்த காலத்தில் நடத்தப்பட்ட உலகத் தமிழ் ஆராச்சி மகாநாடுகள் ஆளும் வர்க்கத்தின் பாதம் தாங்கிகளால் ஒரு சமூக விஞ்ஞான நோக்கமற்று தங்களைப் பிரபல்யப் படுத்தும் ஒரு சடங்காகவே நடாத்தப்பட்டு வந்துள்ளன. இதை நாம் தவளைக் குரலில் தமிழைப்பேசி, நாஸ்தீகம், திராவிடம் பேசி இன்று இவை அனைத்தையுமே கைவிட்டு இந்திய ஆரிய பிராமண ஆஸ்தீக ஆளும் வர்க்கத்திடம் மண்டியிட்டுள்ள கருணாநிதி முதல் கடந்த கால காட்டுமிராண்டி ஜெயா வரை கண்டு வந்துள்ளோம். இவைபற்றி இன்னமும் விபரமாக ஆராய்வோமானால் ஐரோப்பாவில் இருந்து வெளிவரும் ''பாலம்'' என்ற கவர்ச்சிகரமான இலக்கிய யூலை 1996 மாதப் பத்திரிகையில் மலேசியப் பேராசிரியர் திரு கல்யப்பெருமாளின் நேர்கோணலில் கூறப்பட்ட வற்றை இங்கு தரலாம். உலகத் தமிழாராச்சி மகாநாடு பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? என்ற கேள்விக்கு பதில் அளிக்கையில் பின்வரும் விபரங்களை அவர் வைத்துள்ளார்.

1) ஆரம்பத்திலே அதாவது முதல் மகாநாடு நடைபெற்ற போது தமிழ் ஆராச்சி பற்றிய ஒரு குறிப்பிட்ட திட்டம் திரு தனிநாயகம் அடிகளிடம் இருக்கவில்லை. இதனால் தான் அவருடன் முரன்பட்டதாகக் கூறியுள்ளார்.

2) இன்று மகாநாடு வெறும் ஆய்வுக் கட்டுரைகரளப் படிக்கம் ஒரு இடமாகிவிட்டது.

3) மொழித் துறையில் நமக்கு வழி நடத்தல்கள் தேவை கற்றல் கற்பித்தல் வழிநடத்தல்கள் தேவை. இதற்கு ஆராச்சி மகாநாடு உதவ வேண்டும். ஆராச்சி மாநாடு என்பது ஆரவார மகாநாடு ஆகிவிட்டதே தவிர மக்களுக்கு ஆடிப்படையில் உதவவில்லை.

4) ஒரு மகாநாட்டுத் தீர்மானம் அடுத்து மகாநாட்டிற்கு ஆராய்வுக்கு எடுக்கப்பட்டு அது எந்தளவு நடைமுறை படுத்துப்படுகின்ற என்பது மீளாய்வு செய்யப்படுவதில்லை. இதெல்லாம் இல்லாமல் எதற்கு ஆராய்ச்சி மகாநாடு.

5) அவரின் தொடர்ந்த பதில் பின்வரும் அடிப்படை உண்மையை உலகத் தமிழ் மக்களுக்கு அம்பலப்படுத்துகின்றார். இரண்டாவது உலகத் தமிழாராச்சி மகாநாட்டை அறிஞர் அண்ணா நடத்திய போது கொஞ்சம் பணம் ஒதுக்கினார். அது என்னாச்சு? எம.ஜி.ஆர் மாநாட்டை நடத்திய போது 10 கோடி ருபாயும், 10 ஏக்கர் நிலமும் தருவதாகச் சோன்னார். ஐ.ஏ.எஸ் அதிகாரிகளைப் போட்டு அந்நிலத்தைப் பார்வை யிட்டனர் இப்போது அந்த நிலம் எங்கோ? பணம் எங்கே? என்பதே தெரியவில்லை.

அதே நேர்கோணலில் ஐரோப்பாவில் மாநாடு நடத்தினால் பயனேதும் உண்டா? என்ற கேள்விக்கு அவரின் பதில் சிறப்பாக அமைந்துள்ளது. அதாவது மேலே குறிப்பிட்ட சூழலில் ஐரோப்பாவில் மாநாடு நடத்துவதன் மூலம் ஐரோப்பாத் தமிழர்களுக்கு என்ன வகையான பயன் ஏற்படும்

சுமைகள் முகவரி

SUMAIHAL
POSTBOKS 10
5125 BØVÅGEN
NONWAY

ஆக்கபூர்வமான விமர்சனங் களையும், ஆக்கங்களையும் உங்களிடம் இருந்து எதிர் பார்க்கிறோம்.

சுமைகளின் தபாற் கணக் கிலக்கம்

0826 08 68292



முதலாளித் துவத்தின் தூக்கில் தொழிலா ளர்களின் வாழ்வு இதுதான்!

www.tamilarangam.net



From
Sumaihal
P. Box 10
5125 Bøvågen



என்பதனை முழுமையாக ஆய்வு செய்து விட்டு மாநாடு பற்றி சிந்திப்பதே நல்லது.

ஆனால் பேராசிரியர் குறிப்பிட்ட ஆய்வு, விமர்சனம், சிந்தனை, தேடல், ஆக்கம் எல்லாமே ஸ்தம்பிதமான நிலமையையும், ஓர் இருண்ட நிலையுமே தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. இன்று ஐரோப்பாவில் மாநாட்டை நடத்துகின்ற பின்பலம் உள்ளவர்களாக இருப்பவர்கள் புலம் பெயர்ந்து ஈழத் தமிழர்கள் தான். ஆனால் அவர்கள் மத்தியில் தமிழ், ஈழம் என்ற பெயரில் அரசியல் வியாபாரமும், அதனை ஒட்டிய பத்திரிகை வியாபாரமுமும் தான் நடைபெறுகின்றன. இவர்கள் இரு பகுதியினருமே மக்களை இருட்டில் மூழ்கடித்து தமது சுரண்டலைத் தொடர்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் சூழலில் ஓர் புதிய முயற்சியை பேராசிரியர் எதிர் பார்த்ததுபோல் முன்னெடுக்க முடியாது. இந்நிலையில் தமிழர்களாகிய எம் முன் முத்தமிழை முன்னேற்றுவதற்குரிய வழி என்ன? என்ற கேள்வி விசுபரூபமாக எழுந்து நிற்கின்றது. இதற்குரிய பதிலுக்கப் பொவதற்கு முன் இன்னும் சிலவிடையங்களை எமது பார்வைக்கு உட்படுத்துவோம்.

எங்களுக்குத் தெரிந்தவரை தமிழ் மொழியில் ஒரு சமூக விஞ்ஞான விமர்சனத்தை முன்னைத்தவர்களில் தோழர் கைலாசபதி முதன்மையான இடத்தை வகிக்கின்றார். அவர் வழியில் அவருடன் இனைந்து அப்பணியை முன்னேடுத்தவர் பேராசிரியர் சிவத்தம்பியாகும். பேராசிரியர் சிவத்தம்பியின் சந்தர்ப்பவாத, தமிழீழ ஆளும் வர்க்க சார்பு நிலைப்பாட்டில் எமக்கு முரண்பாடு இருந்த போதும் அவரது தமிழ் பணியை என்றும் பொற்றுவோம் ஆதரிப்போம். அந்தவகையில் நடந்து முடிந்த தமிழாராச்சி மகாநாட்டில் ஜெயலலிதா அரசால் அவரும் இன்னும் பல ஈழத்தமிழர்களும் விழாவில் பங்கேற்ற விடாமல் தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டது மிக மோசமான செயல் என்பதுடன் தமிழ் மொழியின் எதிர்கால வளர்ச்சியைத் தடுக்கம் ஒரு செயலாகும். இதை ஈழத் தமிழர் மாத்தரமல்ல உலகத் தமிழர்கள் அனைவருமே கண்டிக்க வேண்டும். கண்டித்தலுடன் மாத்திரம் நிறுத்தாது தமிழ் நாடு மக்கள் கலை இலக்கியக் கழகம் போன்று பார்ப்பண கர்நாடக இசைவிழாவிற்கு மாற்றீடாக தமிழ் மக்கள் இசை விழாவை நடத்தியது போல் உலகத் தமிழர்களாகிய நாமும் புதிய உலக முத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை உருவாக்க வேண்டும். இந்த வகையில் இன்று தமிழீழ தேசிவிடுதலைப் போராட்டத்தை நடத்துகின்றவர்களும், பல ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க, கனடா போன்ற நாடுகளில் புலம் பெயர்ந்து வாழுபவருமான எமக்கு நிறைய சந்தர்ப்பமும் வசதியு முண்டு. ஆனால் இன்று எமது போராட்டத்தின் தலைமையைக் பற்றி தேச விடுதலைப் போராட்டத்தை ஒரு சீரழிந்து, இஸ்தம்பித நிலைக்கு இட்டுச் சென்றுள்ள தமிழீழ ஆளும் வர்க்கத்தாலோ அல்லது அதன் சார்பு அமைப்புகளாலோ ஒரு பொதும் செய்யப்படப் போவ தில்லை. இதே கட்டம் தான் ஆரம்பத்தில் புகலிட மக்களிடம் இந்திய சினிமாக் குப்பைகளையும், அளும் வர்க்க சார்பு இசைக் கலைஞர்களையும், அழைத்துப் பணம் பண்ணினார்கள். பின் ரஜனிகாந் போன்ற வர்கள் இங்கே பணம் பண்ண வந்த போது அதை எதிர்த்தார்கள். ஏனெனில் தங்கள் வியாபாரத்திற்கு அவன் போட்டியாக வந்துவிட்டான் என்பதாலாகும். எனவே இந்த உண்மையைப் புரிந்து கொண்ட பரந்து பட்டதமிழ் மக்களாகிய நாம் அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி புதிய பாதையை நோக்கி முன்னேறுவோம். எதிர்கால உலகத் தமிழ் மக்களின் வாழ்வும், வளமும் அவர்களின் மொழியின் வளர்ச்சியிலும் சிறப்பிலும் தங்கியுள்ளதை நினைவு கூர்ந்து அதற்காக உழைப்போம்.

---

கலை இலக்கிய விமர்சனத்தில் அரசியல், கலையியல் என இரண்டு வரையறைகள் உண்டு.......
அங்கு அரசியல் வரையறையும், கலையியல் வரையறையும் உண்டு. இவை இரண்டுக்கும் உள்ள உறவு யாது? அரசியலைக் கலையுடன் சம்மந்தப் படுத்த முடியாது. ஒரு கலைப்படைப்பு கலை பற்றிய விமர்சன முறையுடன் பொது உலக நோக்கையும் சமப்படுத்த முடியாது. ஒரு சூட்சமான முற்றிலும் மாறாத அரசியல் வரையறை உண்டு என்பதையும் நாம் மறுக்கின்றோம். வர்க்க சமுதாயங்களில் உள்ள ஒவ்வோரு வர்க்கத்துக்கும் அதற்குரிய அரசியல் கலையியல் வரையறைகள் உண்டு. ஆனால் எல்லா வர்க்க சமுதாயங்களிலும் உள்ள எல்லா வர்க்கங்களும் விதிவிலக்கின்றி அரசியல் வரையறையை முதலிடத்திலும், கலையியல் வரையறையை இரண்டாம் இடத்திலும் வைக்கின்றன........ நாம் அரசியல் கலை இரண்டின் ஐக்கியத்தை, புரட்சிகர அரசியல் உள்ளடக்கம், சாத்தியமான அதி உயர்ந்த அளவு பூர்த்தியான கலையியல் வடிவம் இரண்டின் ஐக்கியத்தைக் கொருகின்றோம். கலையியல் பண்பு குறைந்த கலைப் படைப்புகள், அரசியல் ரீதியில் எவ்வளவு முற்போக்கு உடையதானாலும் அவ்வளவு சக்தி வாய்ந்ததல்ல. எனவே தவறான அரசியல் கண்னோட்டமுடைய கலைப்படைப்புகள் சரியான அரசியல் கண்ணோட்ட முடைய, ஆனால் கலையாற்றல் குறைந்த ''சுவரோட்டி அல்லது முழக்கமிடும் நடை'' தழுவிய போக்கு இரண்டையும் நாம் எதிர்க்கின்றோம். கலைஇலக்கிய பிரச்சனைகள் சம்மந்தப்பட்ட வகையில் நாம் இரு முனைகளிலும் போராட்டம் நடத்த வேண்டும்.
(''ஏனான் கலை இலக்கிய கருத்தரங்கு உரை'' மாவோ)